Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 354

ஞாயிற்றுக்கிழமை
16 நவம்பர் 2025

ஐப்பசி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

20ஆம் திகதி வரை

## வடக்கில் கனமழை!

யாழ்ப்பாணம், நவ. 16
வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் 20ஆம் திகதிவரை கனமழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா

15



## ராஜபக்சக்கள் எக்காலத்திலும் நாட்டைப் பாதுகாக்கவில்லை!

பொன்சேகா மீண்டும் சீண்டல்



கொழும்பு, நவ. 16
போரை வைத்து ராஜபக்சக்கள் பிழைப்பு நடத்தினர். அவர்கள் ஒருபோதும் நாட்டைப் பாதுகாக்கவில்லை என்று ஸ்ரீலங்கா இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

15

மன்னாரில் தொடர்ச்சியாக இடம்பெற்ற

# காற்றாலைக்கு எதிரான போர் நேற்றுடன் நிறைவுக்கு வந்தது!

### மன்னார் ஆயர் தலைமையில் மாவட்டச் செயலரிடம் மனு

**மன்னார், நவம்பர் 16**

**மன்னாரில் நூறு நாள்களுக்கும் மேலாகத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த, காற்றாலை மின் திட்டத்துக்கு எதிரான போராட்டம் நேற்று மாலையுடன் நிறைவுக்கு வந்துள்ளது.**

15

ஈழத்தமிழர்களின் உரிமைகள் தொடர்பில்

## தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் தமிழகம்!

திருமாவளவனிடம் கஜேந்திரகுமார் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 16
விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தமிழக ஆட்சியில் முக்கியமான பங்காளி. எனவே, ஈழத்தமிழர் உரிமைகள் தொடர்பாக தி.மு.க.வின் ஆட்சியில்தெளிவான நிலைப்பாட்டை

15



## படகுகள் மோதி விபத்து; மீனவர் ஒருவருக்குக் காயம்

மன்னார்க் கடலில் சம்பவம்

மன்னார், நவ. 16
மன்னார் தாழ்வுபாடு கடற்பரப்பில் இரு படகுகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளான நிலையில், மீனவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.
மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுவிட்டுத் திரும்பிய

14

இலங்கைக்கு

## ஐந்தாவது தவணைக் கடன்; நாணய நிதியம் பரிசீலனை

அதன் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 16
இலங்கைக்கு ஐந்தாவது தவணைக் கடனுதவியை வழங்குவது தொடர்பில் நாணய நிதியம் மதிப்பாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது என்று

16

## ஈஸ்டர் தாக்குதலை வைத்து அநுர தரப்பு வாக்குவேட்டை

சஜித் சரமாரி விளாசல்



கொழும்பு, நவ. 16
ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வழங்குவதற்காக அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விமர்சித்துள்ளார்.
ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் பட்ஜெட் விவாதம் தற்போது

16



## ஐஸ் போதைப் பொருள்; இளைஞர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 16
நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், ஐஸ் போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

14

## மாகாணத் தேர்தலை நடத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு

கொழும்பு, நவ. 16
மாகாணசபைத் தேர்தல் மற்றும் அது நடத்தப்படும் முறைமை தொடர்பில் ஆராய்வதற்காக விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைக்கப்படவுள்ளது என சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

15

போரின்போது இடம்பெற்ற

## மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறல் அவசியம்!

ஸ்ரீநேசன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, நவ. 16
இறுதிப்போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் மிகவும் அவசியம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற

15

### முச்சந்தி முரளி

'வாக்கு எண்டு வந்திட்டா அரசியல்வாதியள் வாய்ப்பந்தல் போடுறதும் சனங்கள் வாய்பாக்கிறதும் வழமை கண்டியளோ'

வடமாகாண

## பிரதிப் பொலிஸ்மா அதிபராக புத்திக்க சிறிவர்த்தன நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 16
வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக ஜி.எம்.எச்.புத்திக்க சிறிவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு அமைய, சிரேஷ்ட பொலிஸ்

14

# சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 15.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4256 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 32 40 43 46 |
| விசேட எழுத்து | P |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 15.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1323 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 11 26 58 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 15.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0282 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 0 9 8 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 15.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2362 |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 11 |
| வெற்றி இலக்கங்கள் | 03 06 26 66 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 15.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6014 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 8 8 3 8 0 2 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 15.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2044 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 02 49 52 69 |
| விசேட எழுத்து | O |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 15.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0130 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 15 17 44 |

# இனப்பிரச்சினைக்கான தீர்வு; அநுர அரசும் அசண்டையீனம்

## செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு

**மன்னார்,நவ.16**

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் விவகாரத்தில் இந்த அரசாங்கமும் அக்கறை கொள்ளவில்லை. ஐ.நா.தீர்மானத்தின் படி உள்ளக விசாரணைகளை முன்னெடுப்பதாகக் கூறினாலும் காலநீடிப்பை மேற்கொள்ளவே முயற்சிக்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், வரவு - செலவுத்திட்டத்தின் 2 ஆவது வாசிப்புக்கான வாக்கெடுப்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் விசேட கூட்டத்தின் அடிப்படையில் எதிர்த்து வாக்களித்துள்ளோம்.

தற்போதைய அரசாங்கம் ஜனநாயக மீறல்களைச் செய்து வருகின்றது. அவர்களின் அங்கத்தவர்களுடன் கிராமம் தோறும் அபிவிருத்திக் குழுவை உருவாக்கிச் செயற்பட முயல்கின்றது. அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

பட்ஜெட்டில் இராணுவத்துக்குக் கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் நிதியை வடக்கில் கூடுதலாகச் செலவழிப்பதாகக் கூறியபோதும், ஒரு வேலைத்திட்டமும் இடம்பெறவில்லை.

தற்போது கிழக்கிலும் தமது அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர். இந்த அரசாங்கம் மக்களுக்கு அபிவிருத்தியை மேற்கொள்வதாக வெறும் வாய்ப்பேச்சில் மட்டுமே கூறுகின்றது. நடைமுறையில் அது இல்லை- என்றார். (க-56)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 15.11.2025 | சனிக்கிழமை | 0722 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| S | 6 1 2 3 4 0 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 15.11.2025 | சனிக்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 2988 | J | 04 21 22 74 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 15.11.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| H | 01 13 71 74 | 5149 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 15.11.2025 | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0818 | 09 23 49 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 15.11.2025 | சனிக்கிழமை | |
| தனு | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 03 09 26 32 | 4700 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 15.11.2025 | சனிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 04 | 04 20 28 73 | 2164 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 15.11.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 06 46 51 76 | 2814 |



# சிறுமி துஷ்பிரயோகம்; தந்தைக்கு கடூழியம்!

யாழ்ப்பாணம், நவ.16

தனது 14 வயது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தச் சம்பவம் 2018ஆம் ஆண்டு டிசெம்பர் நிகழ்ந்துள்ளது. இந்த வழக்கில் குற்றவாளியின் குற்ற ஒப்புதலையடுத்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரஷ்மி சிங்கப்புலி அவருக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளார். (ச-இ)

# விளையாட்டு வினையானது

யாழ்ப்பாணம், நவ.16

உயிர்மாய்ப்பதாக மனைவியை மிரட்டியவர், கழுத்தில் போடப்பட்ட சுருக்கு இறுகி மூச்சுத்திணறல் ஏற்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.


இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் உரும்பிராயில் நடந்துள்ளது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ச)

# புதிய மரக்கறிச் சந்தை இழுத்து மூடிப் பூட்டு!

## பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.16



பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டடத்தின் மேற்தளத்தில் இயங்கிவரும் மரக்கறிச் சந்தையிலிருந்து வியாபாரிகளை வெளியேறுமாறு அறிவுறுத்தி நேற்றுக்காலை சந்தைக்குப் பூட்டுப் போட்டு பூட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போலினால் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

பருத்தித்துறை மரக்கறிச் சந்தையின் இட அமைவு தொடர்பில் நீண்டகாலமாக இழுபறி நிலை நீடித்துவந்த நிலையில் அண்மையில் பெய்த மழை காரணமாக பருத்தித்துறை நகரின் மத்தியில் உள்ள நவீன சந்தைக் கட்டடத்தொகுதியின் மேற்தளத்துக்கு மரக்கறி வியாபாரிகள் கடந்த வியாழக்கிழமை அதிகாலை தன்னிச்சையாக உட்பிரவேசித்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

அதனையடுத்து தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்வரை நவீன சந்தைக் கட்டடத்தில் மரக்கறிச் சந்தையை தற்காலிகமாக இயங்க அனுமதிப்பதென்றும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் புதிய சந்தையில் வியாபார நடவடிக்கையை நிறுத்துவது எனவும் அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் நகரசபை தவிசாளரினால் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

எனினும் இந்த இடத்திலிருந்து வலுக்கட்டாயமாக வியாபாரிகள் வெளியேற்ற முற்பட்டால் தீக்குளித்து உயிர்மாய்ப்பதற்கும் தயாராக உள்ளதாக மிரட்டலும் விடுத்து புதிய மரக்கறிச் சந்தையிலேயே வியாபாரிகளால் வியாபார நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வந்தது. இந்தநிலையில் இதுதொடர்பான அறிவித்தல் நோட்டிஸ் ஒட்டப்பட்டு புதிய மரக்கறிச் சந்தைக்கு நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை நகரசபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போலினால் பூட்டுப்போட்டு பூட்டப்பட்டது.

அத்துடன் அங்கு வியாபார நடவடிக்கையைத் தொடர்ந்த வியாபாரிகள் தமது விய[illegible] அனுமதிக்கப்பட்டுள்ளது. (ச-100)

# மருந்துச் சிட்டைகளில் தெளிவைப் பின்பற்றுக

## மருத்துவர்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, நவ.16

மருந்துச் சீட்டுகளை எழுதுதல் மற்றும் பரிந்துரைத்தல் தொடர்பான விடயங்களில் தெளிவான வழிகாட்டுதல்களை மருத்துவ நிபுணர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று இலங்கை மருத்துவ சபை அறிவுறுத்தியுள்ளது.

தெளிவு மற்றும் நோயாளியின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு இந்த வழிகாட்டுதல்கள் அவசியம்.


சில மருத்துவர்களால் வழங்கப்படும் தெளிவற்ற மருந்துச்சீட்டுகள் குறித்து மருந்தாளுநர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் வந்துள்ளன.

தெளிவின்மை சரியான மருந்தை அடையாளம் காண்பதைக் கடினமாக்கியுள்ளதாகவும் இது நோயாளியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே மருத்துவ நிபுணர்களால் தெளிவாக மருந்துச்சீட்டுகள் எழுதப்படவேண்டும் என்றும் இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறும் மருத்துவர்கள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இலங்கை மருத்துவ சபை மேலும் எச்சரித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்தியமான வாக்குறுதிகளைக்கூட நிறைவேற்றத் தவறியுள்ளது அரசு!

### பிரான்ஸ் தூதுவரிடம் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டு



**கொழும்பு, நவ.16**

**தற்போதைய அரசாங்கம் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் வழங்கிய நடைமுறைச் சாத்தியமுள்ள வாக்குறுதிகள்கூட இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என்று இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவரிடம் சுட்டிக்காட்டியுள்ளார் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன்.**

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ரெமி லெம்பேர்ட், பிரதித்தூதுவர் மத்தியூ ஜோன் ஆகியோருக்கும் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையே கொழும்பில் சந்திப்பொன்று நடைபெற்றது. அதிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன்,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் பல்வேறு நடைமுறைச்சாத்தியமான வாக்குறுதிகளை அளித்தது. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுதல், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குதல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல் உள்ளிட்ட தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகள் உள்ளடங்கிய விடயங்களுக்கு நிரந்தரமான தீர்வு வழங்கப்படும் என்று கூறியிருந்தனர்.

அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்று ஆண்டொன்று நிறைவடைந்துள்ளபோதும் இதுவரையில் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள்கூட முன்னெடுக்கப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தினை அரசாங்கம் நிராகரித்துள்ளதோடு உள்ளக ரீதியில் பொறிமுறைகள் எவற்றையும் நிறுவவில்லை. அரசாங்கம் சர்வதேசத்தின் பொறுப்புக்கூறலுக்கான ஈடுபாட்டையும் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராகவும் இல்லை. ஊழல்,மோசடிகளுக்கு எதிரான நடவடிக்கைகள், போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதும் அந்தச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டியது அவசியமாகின்றது. மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்ச்சியாக காலம் தாழ்த்தப்பட்டு வருகின்றது. பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்காக எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணையை முன்னகர்த்துவதில்கூட அரசாங்கம் ஆர்வம் காண்பிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கு நிலைமைகள், தமிழ் மக்களின் அபிலாஷைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் சுமார் ஒன்றரை மணிநேரம் கலந்துரையாடல் நடைபெற்றது. (ஏ-இ)



## நட்டமடையும் எயார்லைன்ஸ்

கொழும்பு, நவ.16

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் இழப்புகள் 2025/26 நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ரூ.12.6 பில்லியனாக அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

சரக்கு வருவாய் வீழ்ச்சி மற்றும் விமானப் பராமரிப்புச் செலவு அதிகரிப்பு ஆகியவையே இதற்குக் காரணமாகுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஏற்பட்ட ரூ.4.2 பில்லியன் இழப்புடன் ஒப்பிடுகையில் மிக அதிகம்.

இதற்குப் பிரதான காரணம், ரூ.8.5 பில்லியன் மதிப்புள்ள குறிப்பிடத்தக்க அந்நியச் செலாவணி இழப்புகள் மற்றும் அதிக நிதிக் கட்டணங்களாகும் என்று நிதி அமைச்சு கூறியுள்ளது. (ச-இ)

## சிவவேள்விப் பெருவிழா


யாழ்ப்பாணம், நவ.16

மானிப்பாய் சங்குவேலி வைரவர் காளி அம்பாள் தேவஸ்தான திருமுறைச் சிவவேள்விப் பெருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

அதிகாலை 5மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் விசேடபூசை நடைபெற்று மூகூர்த்தப் பத்திரிகை வாசிக்கப்பட்டு அதிகாலை 5.55மணிக்கு திருமுறைச் சிவவேள்வி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இரவு பகலாக 14 நாள்கள் ஓதப்படும்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி வியாழக்கிழமை அகண்ட நாம கூட்டுப்பிரார்த்தனையும், திருமுறை 1008 போற்றி அருட்சுனையும் நடைபெற்று திருமுறை சிவவேள்விப் பெருவிழா நண்பகல் 12மணிக்கு நிறைவடையும்.

திருமுறை ஓத விரும்புபவர்கள் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் பெயர்களைப் பதிவுசெய்யவும். மேலதிகத் தகவல்களுக்கு 077 226 2572 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ச-41)



## பெரிய வெங்காயம் கொள்முதல் ஆரம்பம்

கொழும்பு, நவ.16

நாட்டில் தற்போது பெரிய வெங்காயக் கொள்முதல் திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக விவசாய அமைச்சின் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயம் 130 ரூபா என்ற விலை அடிப்படையில் கொள்முதல் செய்யப்படும்.

இந்தக் கொள்முதல் நடவடிக்கைகள் சதொச, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

## தகாத வார்த்தைகள் தவிர்க்கப்படவேண்டும்

### சபாநாயகர் அறிவுறுத்து

கொழும்பு, நவ.16

நாடாளுமன்ற அமர்வின்போது நாடாளுமன்ற கௌரவத்துக்குப் பொருத்தமற்ற மற்றும் தகாத வார்த்தைகளை ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக பயன்படுத்துவதை அவதானிக்க முடிகிறது. தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி பேசுவதையும், குற்றச்சாட்டுகளை முன்வைப்பதையும் இனித் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன எச்சரித்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் நாடாளுமன்றத்தின் உயரிய கௌரவத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், அது வெறுக்கத்தக்கதுடன், கவலைக்குரியதுமாகும். நாட்டின் மேன்மை பொருந்திய நாடாளுமன்றத்தின் உயரிய கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு சகல மக்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## முச்சக்கர வண்டிகளுக்கு போதை ஒழிப்பு ஸ்ரிக்கர்

யாழ்ப்பாணம்.நவ.16

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சேவையில் ஈடுபட்டுவரும் முச்சக்கர வண்டிகளுக்கு, போதை ஒழிப்பு அடையாள ஸ்ரிக்கர் ஒட்டும் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

போதை ஒழிப்பு தேசிய வேலைத் திட்டத்துக்கு அமைவாக, பருத்தித்துறை பொலிஸ் நிலைய - சமூக பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் இந்தச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. பிராந்திய உப பொலிஸ் அத்தியட்சகர், பருத்தித்துறை பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி ஆகியோர் தலைமையில், நூற்றுக்கணக்கான முச்சக்கர வண்டிகளுக்கு ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டது. (க-100)

## 5,000 நாய்களுக்கு வடக்கில் கருத்தடை



யாழ்ப்பாணம், நவ.16

வடமாகாணத்தில் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு சுமார் 5 ஆயிரம் பெண் நாய்களுக்கு கருத்தடை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வட மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட விவசாய மற்றும் உணவுப் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். அநேகமான பிரதேசசபைகள் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்காக கருத்தடைகளை மேற்கொண்டுவருகின்றன.

அதன் அடிப்படையில் வடமாகாணத்தில் சுமார் 5 ஆயிரம் நாய்களுக்கான கருத்தடை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் சுமார் 3 ஆயிரத்து ஐநூறு நாய்களுக்கான கருத்தடைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

மலர்வு 02 . 02 . 1948



உதிர்வு 13 . 11 . 2025

### துரைராஜா யோகராஜா

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைப் பூர்வீகமாகவும், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், இந்தியாவில் அண்ணாநகர் சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா யோகராஜா அவர்கள் கடந்த (13.11.2025) வியாழக்கிழமை அன்று இரவு 09.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெய்வத்திரு கார்த்திகேசு தம்பதிகளின் பேரனும், தெய்வத்திரு துரைராஜா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், தெய்வத்திரு சபாபதி - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி தவமணிதேவி அவர்களின் அன்புக் கணவரும், அசானந், யோஷானந், தஷானந், அஷாரா, துஷாரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காயத்திரி, மேரிடயானா, ஹரினி, பகீரதன், முருகானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யாதுனந்த், வாகை, சான்வி, சித்ரித், ஆதன், அதிரன், ஆதினி, மிருநாளினி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், காலஞ்சென்றவர்களான வேகாவனம், ராஜவனம், கனகராஜா, செல்வராஜா மற்றும் தங்கராஜா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற புலேந்திரசிங்கம் மற்றும் சூரியகுமார், ஜீவகுமார், தேவகுமார், சேளி, மேளி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

அசானந் +91 984 028 0118, யோஷானந் +9470 389 7097
அஷாரா +1 647 447 1299,

தகவல் :
மனைவி, பிள்ளைகள்


# கடைக்குள் புகுந்த பஸ்; ஸ்தலத்தில் பெண் பலி

கொழும்பு, நவ.16

பேராதனை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கெலிஓய, கரமட பிரதேசத் தில் இடம் பெற்ற விபத்தில் கடையொன்றிலிருந்த பெண்ணொருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார். நுவரெலியாவிலிருந்து கொழும்பு நோக்கி அதிவேகமாக வந்த ஒரு தனியார் பேருந்தே இந்த விபத்தை ஏற்படுத்தியுள்ளது. விபத்தை ஏற்படுத்திய தனியார் பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்துக்கு

# 10 ஆண்டுகளுக்குப் பின்னர் புதிய இடைக்கால நிர்வாகம்

யாழ்ப்பாணம், நவ.16

50 ஆண்டுகளுக்கு முன்னர் நல்லூரில் தொடங்கப்பட்ட இளங்கலைஞர் மன்றத்துக்குப் பத்தாண்டுகளுக்குப் பின்னர் புதிய இடைக்கால நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டு மீளமைக்கப்பட்டுள்ளது.

மன்றின் பிரதான உறுப்பினர்கள் சிலர் மன்றச் செயற்பாடுகளுக்கு ஒத்திசைவாகச் செயற்படவில்லை என்று நிறுவுநர் உட்பட மூத்தவர்களால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட தையடுத்து மன்றத்தின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் பதவி விலகுவதாக நிறுவுநருக்கு அறிவித்திருந்தார்.

அதன் பின்னர் கடந்த 8 மாதங்களாக நிறுவுநரால் முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் தலைமையில் மன்றச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிய இடைக்கால நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது. இதன் தலைவராகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் த. ஜெயசீலன், செயலாளராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, பொருளாளராக மூத்த கணக்காளர் க.மகாலிங்கம், உபதலைவராக யாழ்.பரியோவான் கல்லூரி ஆசிரியர் சி.செந்தூரன், உப செயலாளராக திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.அமிர்தலோஜனன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ள னர். செயற்குழுவில் 20 பேர் உறுப்பினர்களாகவும், யாப்பு சீரமைப்புக்குழுவுக்கு ஆறு பேர் உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (க-100)


## மரண அறிவித்தல்

மலர்வு 21 . 04 . 1957



உதிர்வு 15 . 11 . 2025

### அன்ரன் பீற்றர் சகாயகொன்சி (ஜீவம்)

பருத்தித்துறை முனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் பீற்றர் சகாயகொன்சி அவர்கள் நேற்று (15.11.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப் - மேரி யோசேபின் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தீயோகுப்பிள்ளை - மேரி விக்ரோறியா தம்பதியரின் அன்பு மருமகளும், அன்ரன் பீற்றர் அவர்களின் அன்பு மனைவியும், அருட்தந்தை அன்ரன் பீற்றர் திருமகன் (அதிபர் - புனித பத்திரிசியார் கல்லூரி), திருமாறன் (லண்டன்), திருவர்ணன் (லண்டன்), வசீகரன் (சுவிஸ்), மாதவன் (பிரான்ஸ்), றெமிக்கா, திருராஜேஸ்வரன் (லண்டன்), ராதிக்கா (பிரான்ஸ்), பிறேமசீலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திராணி (கனடா), றீசன் (இத்தாலி), காலஞ்சென்ற குணசீலன், துரை, அன்ரன், தம்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியராசா (ஜேர்மன்), காலஞ்சென்ற றெஜினா ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமாறன் வனித்தா, திருவர்ணன் டர்சினி, வசீகரன் சியாமிளா, மாதவன் தர்சனா, ஞானரத்தினம் அன்ரன் யேசுதாஸ் (நீதிமன்ற பதிவாளர், மாவட்ட நீதவான் நீதிமன்றம் - மல்லாகம்), திருராஜேஸ்வரன் ஸ்றெலா, காலஞ்சென்ற கைன்லஸ், பிறேமசீலன் றொசானா ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிசா, மான்சி, மெலிசா, பியர்சன், அஸ்வினா, அபிநாத், எல்சி, அபிநயா, எல்சா, ஏமி, அதிசயன், அனன்யா, பிரணீஸ், றெய்னா, பிரணிக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 19.11.2025 புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் புனித தோமையார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கோரியடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
மகன் - அருட்தந்தை அ.பி.திருமகன் - 077 8015 980
மகன் - அ.றெமிக்கா - 077 8015 437



## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியாளர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர் மற்றும் தனியார் துறையினர், வெளிநாட்டு மணமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் எம்மிடம் உள்ளனர்.

மிகப்பொருத்தமாக உடன் ஜாதகங்கள் தரப்பட்டு மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணிமண்டபத்திலிருந்து 3 வீடு தள்ளிய லேனில்)


021 222 9306, 077 138 7596,
071 999 9306

(CS 30726) A



## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 12 . 1954



மறைவு 15 . 11 . 2025

### பொன்னன் கிருஷ்ணநாதன்

(முன்னாள் எழுது வினைஞர் - கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்)

மந்துவில் கிழக்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், பொன்னையா வீதி ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னன் கிருஷ்ணநாதன் அவர்கள் நேற்று (15.11.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்ணன் - ஆசைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், யோகலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், நிஷாந்தினி, நிஷாந்தன், காலஞ்சென்ற இராகுலன் மற்றும் விதுஷன்,விதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரஸ்வதி, நல்லம்மா, கமலா, இராசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், தம்பிராசா, துரைராசா, இராசதுரை, சிவராசா, இராசலட்சுமி மற்றும் துரையம்மா, சின்னராசா, வரதலட்சுமி, வனிதலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், வாகீசன், கஜானி ஆகியோரின் அன்பு மாமனாரும், கரிசனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 02.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் அனுகூலமாகமுடியும். மாலையில் குடும்பத்துடன் வீட்டில் தெய்வ வழிபாடு செய்வீர்கள். எதிரிகளால்ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்0 கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச்செல்வது நல்லது. வீட்டில் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும்.

**கடகம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**துலாம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்கள்மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும் மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.


**விருச்சிகம்** : தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். பிள்ளைகள்வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள்.

**மகரம்:** முக்கியமான முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு சற்றுக் கவலை தரும். நண்பர்களுடன் சிறு சுற்றுலா செல்லும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** இன்று நினைத்த காரியத்தை முடிப்பதில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வது ஆறுதல் தரும்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரர் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.





நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத கைலாசநாதசுவாமி திருக்கோயிலில் ஐப்பசி கடைசி வெள்ளியை முன்னிட்டு இயமசங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. மார்க்கண்டேயரின் பொருட்டு இறைவன், மரணத்தின் அதிபதியான இயமனை சங்கரித்து பின் உயிர்ப்பித்தருளிய திருவிளையாடல் உற்சவமாக காட்சிப்படுத்தப்பட்டது. (ச-41)



## நெசவாளர்களுக்கு பயிற்சிப்பட்டறை!

யாழ்ப்பாணம்,நவ.16

வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தின்கீழ் யாழ்.மாவட்டத்துக்குட்பட்ட நெசவாளர்கள், போதனாசிரியர்கள், பயிற்சிப் பயநர்கள் ஆகியோருக்கு ஒரு நாள் விசேட பயிற்சிப்பட்டறை சிறுப்பிட்டி நெசவு நிலையத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.

இதில் கொழும்பிலிருந்து வருகைதந்த விசேட பயிற்றுவிப்பாளர்களால் கருத்துரைகளுடன் விளக்கமளிக்கப்பட்டது. (ச-17)

### சந்நிதி ஆலயச் சூழலில்

## சுகாதார விதிகளைப் பின்பற்றாத உணவகங்களுக்குத் தண்டம்!

யாழ்ப்பாணம்,நவ.16

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சூழலில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாது இயங்கிய உணவகம்மற்றும்பானிபூரிவிற்பனைநிலையங்களுக்கும் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

குறித்த ஆலயத்தின் சுற்றாடலில் அமைந்துள்ள உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்கள்மீது திடீர்ச் சோதனை மேற்கொள்ளப்பட்டபோது இந்தச் செயல் கண்டறியப்பட்டது. இதனையடுத்து இரு விற்பனை நிலையங்களுக்கு எதிராக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ப.தினேஷால், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது. வழக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இரு உரிமையாளர்களுக்கும் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-100)



கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் இயமசங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-159-17)



## இலக்கிய விழா

யாழ்ப்பாணம்,நவ.16

கோப்பாய் பிரதேச செயலகமும் கலாசார அதிகாரசபையும் இணைந்து நடத்திய இலக்கிய விழா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஈ.தயாளுபன் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது.

நிகழ்வில் பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி முதன்மை விருந்தினராகவும், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.கிருஷ்ணகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். நிகழ்வில் கலைநிகழ்வுகளும் சிறப்புற்றன. (ச-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



மரநடுகை மாதம் (நவம்பர்)

மரங்களின்மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வறட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்றமுடியவில்லை

– ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)–

# இராஜகோபுரத்தை நாமறிவோம்...!


தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், அரசியல் மற்றும் இராணுவ ஞானம் உடையவர். அவர் ஒருபோதும் இந்தியாவை எதிரியாகப் பார்த்ததில்லை என்று யாழ்ப்பாணத்தில் வைத்துக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரான தொல்.திருமாவளவன். 'ஈழத் தமிழர்களின் வேணவாவை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டுமாயின், முதலில் இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்ற தெளிவான புரிதல் பிரபாகரனுக்கு இருந்தது' என்றும் இயம்பியிருக்கின்றார் அவர். தலைவர் பிரபாகரன் தொடர்பிலும், அவருடைய அரசியல் ஞானம் தொடர்பிலும் திருமாவளவன் வெளிப்படுத்தியிருக்கும் கருத்துகள் அத்தனையும் உண்மையானவை. ஆனால், அவர் அந்தக் கருத்துகளை வெளிப்படுத்தவேண்டிய இடம் யாழ்ப்பாணமல்ல.

'எம்மை எமக்கே' அறிமுகம் செய்வதில் என்ன நிகழ்ந்துவிடப்போகின்றது? அத்தகையதுதான் தலைவர் பிரபாகரன் தொடர்பில் ஈழத்தில் நின்றவாறு திருமாவளவன் வெளிப்படுத்திய கருத்துக்கள். உண்மையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தன்னுடைய கருத்துகளை வெளிப்படுத்த வேண்டிய இடம் இதுவல்ல. தமிழகத்துக்கும் புதுடில்லிக்கும்தான் அவருடைய கருத்துகள் தேவை. ஏனெனில், பிரபாகரன் தொடர்பில் திருமாவளவனுக்கு இருக்கும் புரிதலைவிடவும் பல மடங்கு தெளிந்த புரிதலைத் தம்பியாகவும், அண்ணனாகவும், தலைவனாகவும், மேதகுவாகவும் ஈழத்தமி ழர்கள் கொண்டுள்ளனர்.

2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட காலங்களில், அந்தரத்தில் கைவிட்ட பல்வேறு அரசியற் தலைவர்களில் திருமாவளவனும் குறிப்பிடத்தக்கவர். அக்காலத்தில் அவர் தனது தார்மீக அரசியற்கடமையை ஆற்றவில்லை என்ற குறை ஈழத்தமிழர்களுக்கு உள்ளது. அதற்குப் பின்னரும்கூட இன்றளவும் ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் தமிழகத் தலைவர்களால் எழுதப்படாத பக்கங்கள் மிக அதிகம். ஈழத் தமிழர்களின் பிரச்சினையை தமிழகத்துக்கு அப்பாற் கொண்டுசெல்லக்கூடிய ஆட்பலமும், கருத்தியல் வளமும், ஊடக உதவிகளும், நிதித் திடமும் தமிழகத் தலைவர்களுக்கு இருக்கவே செய்கின்றது. ஆனால், அவர்களின் குரல்கள் தென்னிந்திய வட்டைக்குள் இன்னமும் குறுகியிருப்பதுதான் அபத்தம். திருமாவளவனும், தலைவர் பிரபாகரனுடன் நேரில் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறிக்கொள்ளும் சீமான் உள்ளிட்ட தலைவர்களும் தமிழகத்தில் காலாவதியாகி விடவில்லை. இன்னும் சொல்லப்போனால், தமது அரசியல் வாழ்க்கையில் உச்சத்தில் அவர்கள் இருக்கின்றனர். மூன்றாவது பெரிய கட்சியாகவும், தீர்மானிக்கும் சக்திகளாகவும் அவர்கள் மாறியுள்ளனர். இவ்வாறான பின்னணியில்தான், விடுதலைப் புலிகள் மீதான தடையை மிகச் சாதாரணமாக மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடித்திருக்கின்றது இந்தியா. அத்துடன், இனப் பிரச்சினைக்குத் தீர்வு விடயத்தில் ஈழத் தமிழர்களைப் பந்தாடியும் வருகின்றது.

எனவே, 'பிரபாகரன் இந்தியாவை ஒருபோதும் அரசியல் எதிரியாகக் கருதவில்லை. அவர் தனது உரையில் பாரதத்தை எங்கும் பகை நாடாக முன்னிறுத்தவில்லை என்ற தெளிவை -அறிவூட்டலை அவர் முதலில் தமிழகத்திலும் இந்தியாவிலும் வழங்கியாகவேண்டும். ஆக, எளிய மக்களுக்காக 'அம்பேத்கர் அரசியலை' முன்னெடுக்கும் திருமாவளவன், அதைத் தாண்டியும் ஈழத் தமிழர்களுக்காகவும் தமிழகத்தில் பெரும் அரசியலை மேற்கொள்ள வேண்டிய காலமிது.



## வங்கி அட்டைகளினூடாக

# இனி பஸ் கட்டணம் செலுத்தும் வசதி!

கொழும்பு, நவ.16
நவம்பர் 24 ஆம் திகதி முதல் வங்கிகளால் வழங்கப்படும் அட்டைகளான கிரெடிட் அல்லது டெபிட் கார்டுகளைப் பயன்படுத்திப் பொதுமக்கள் பேருந்துக் கட்டணங்களைச் செலுத்தமுடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.
குறித்த அறிவிப்பை போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார்.
இந்தப் புதிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டதன்மூலம், பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் பணமில்லாக் கட்டணங்களைச் செலுத்தமுடியும்.
இதேவேளை, மின்னணுப் பற்றுச்சீட்டு வழங்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட பேருந்துகளில் இந்த வசதி கிடைக்கும்.
பொதுப் போக்குவரத்தை நவீனமயமாக்குவதற்கும் தினசரி பயணிகளின் வசதியை மேம்படுத்துவதற்கும் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## துஷித சரண்

கொழும்பு, நவ.16
பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளரான துசித ஹல்லொலுவ நீதிமன்றத்தில் நேற்று சரணடைந்துள்ளார்.
நாரஹேன்பிட்டி பகுதியில் தாம் பயணித்த வாகனம் மீது சிலர் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகக் கூறி, போலியான முறைப்பாடு செய்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபராக துசித ஹல்லொலுவ பெயரிடப்பட்டிருந்தார்.
இந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவருக்கு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## விசேடதேவை மாணவர்கள் சகல பீடங்களுக்கும் அனுமதி

கொழும்பு, நவ.16
உயர்தரப் பரீட்சையில் தகுதிபெறும் விசேட தேவையுடைய மாணவர்கள் நாட்டிலுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் உள்ள அனைத்துப் பீடங்களிலும் அனுமதிக்கப்படுவார்கள் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.
இதற்கு முன்னர், விசேட தேவையுடைய மாணவர்களுக்கு நான்கு பீடங்களில் மாத்திரமே வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)




## 'சுவசெரிய' சேவை அதிகரிக்கத் திட்டம்

கொழும்பு, நவ.16
'சுவசெரிய' அம்புலஸ் படையணியை 500 ஆக உயர்த்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
மேலும் 100 அம்புலன்ஸ்களை வாங்குவதற்கு இந்திய அரசாங்கத்துடன் பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும் அதனை தவிர ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடன் உதவியின் கீழ் 20 அம்புலன்ஸ்களும் அன்பளிப்பாக மேலும் 25 அம்புலன்ஸ்களும் பெறத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (ச-இ)

## சிறுமி கொலை

கொழும்பு, நவ.16
கம்பளையில் சிறுமி ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நேற்றுமுன்தினம் இரவு கொலை செய்யப்பட்டுள்ளார். மில்லகஹமுல, பன்விலத்தென்ன பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுமி ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

நாளை
திங்கட்கிழமை கார்த்திகை 1
17.11.2025
சுபநேரம் : 09.07 - 10.37
ராகுகாலம் : 04.37 - 06.07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA REGISTRATION OF SUPPLIERS & CONTRACTORS – 2026

Applications are invited up to 31st December 2025 from reputed Suppliers / Manufacturers / Contractors who wish to register themselves for the under mentioned supplies and services.

**1. CONSUMABLE ITEMS**
1.1 Stationery Items (Statinery, Calculator, Toner, Cartridge, Printer Ribbon,Printer paper,etc…)
1.2 Kitchen utensils including cutlery & crockery.
1.3 Sanitary Items – Brooms, Eekkal Brooms, Doormats, Baskets, Toilet Cleaner Liquids, Hand Dishwashing liquids, cleaning & polishing materials, etc.
1.4 Raincoats, Gumboots, Umbrellas, Shoes etc.

**2. BOOKS, PRINTING & BINDING**
2.1 Printing, Block Making, Rubber & Date Stamps.
2.2 Book, Magazines & other publications.
2.3 Binding of Books & Periodicals.
2.4 T-Shirt and Jersey Printing Work

**3. FIXTURES & FITTINGS**
3.1 Office Furniture (Wooden/Steel), Computer Chairs & Table
3.2 Office Equipment (Duplicating Machine, Photo Copiers, Fax etc.)
3.3 Fire extinguishing equipment & safety equipment (construction).

**4. BUILDING MATERIALS, MAINTENANCE ITEMS& TOOLS**
4.1 All types of Hardware
a) All kinds of paint, brushes, mixers, and other related materials.
b) Types of cement, types of tile mortar, and types of water proofing cement.
c) River sand, Fine sand, gravel, Metals and stones, etc. for construction work.
d) Steel bars, galvanized pipes, and nails.
e) Building fixtures, fasteners, and locks (made of iron and brass).
f) UPVC/CPVC pipes and fittings.
g) Types of Timber, Planks and reapers
h) Aluminum extrusion and fittings, Glass, plywood.
I) bathroom fittings and tiles for walls and floors.
j) Supply of sewage treatment plants and maintenance items.
k) Supply of water treatment plant and maintenance items.
L) Water proofing chemicals and construction chemicals.
4.2 RO Plant Materials
4.3 Air Conditioner Parts

**5. ELECTRICAL ITEMS**
5.1 Electrical items, equipment & spares (Wire, Bulbs & etc.)

**6. LABORATORY ITEMS**
6.1 Laboratory Equipment.
6.2 Laboratory Chemical & Glassware.

**7. VEHICLE MAINTENANCE**
7.1 Tyres, Tubes & Batteries.
7.2 Motor Spares & accessories.
7.3 Repairs to Motor Vehicle.
7.4 Vehicle Interior works

**8. GENERAL SUPPLIES & SERVICES**
8.1 Ayurveda Drugs/Medicines/Drugs & Medical supplies.
8.2 Sports goods.
8.3 Textiles, Window Curtains, Uniform Materials etc.
8.4 Insecticide, Tools for Gardening, Natural fertilizer, Flower trees and crops.
8.5 Repairs to office machines & equipment (Computers, IT Equipment, Fax Machines, Typewriters, Photocopiers, Calculators & Ronio Machine, etc.)
8.6 Repairs, Polishing and reconditioning to steel / Wooden Furniture.
8.7 Rettaning of Chairs.
8.8 Tailoring of Garments & door & window curtains
8.9 Laundering.
8.10 Janitorial Services.
8.11 Security Service.
8.12 Courier Service
8.13Customs Clearing Service
8.14 Events Management Service.
8.15 Catering Services (Lunch / Refreshments)
8.16 Supply of Video and Photography Services and Equipment.
8.17 Supply of Sound & Light Equipment on rent basis.
8.18 Travaling Agent Service.
8.19 Hiring of Vehicle (Passenger van-with A/C & without A/C, passenger bus, lorry, tractors with trailer, etc.)
8.20 Hiring of Machineries ( JCB, excavator, compressor, pay loader, etc.)
8.21 Waste Disposal and Recycling Services

**9. ENGINEERING SERVICES**
9.1 Drawing of Name boards & making plastic name boards.
9.2 Repairs to electric motors, Water Pumps, Fans, Including re-winding.
9.3 Repairs to Generators.
9.4 Repairs & Servicing to Air Conditioners.
9.5 Construction and repairs to Building/ Roads/ Other Structure
9.6 Electrical wiring.
9.7 Repairs and maintenance of potable water supply, sewerage, drainage and sanitary plumbing.
9.8 Fabrication and Installation of Iron / Aluminum fixtures related to buildings.
9.9 Consultancy service for buildings / building services / related machinery & Equipment.
9.10 Consultancy service for Electrical services.
9.11 Supplying and fixing fixed timber furniture / Carpentry works.
9.12 Drafting / Blue printing drawing, Auto Cad Drawings.
9.13 Termite proofing / pest control services.
9.14 Labour supply (Skilled, unskilled and Security).
9.15 Preparation of Bill of Quantity (BOQ) for Maintenance Work.
9.16 Repairs and maintenance of fire detection, protection, and suppression systems.

**10. Electronic Items**
10.1 Electronic components including Computers, Computer Parts.
10.2 I.T Hardware & Software Supply, Service & Maintenance.
10.3 Communication Systems & Equipment Supply, Service &Maintenance.
10.4 Telephone Equipment.
10.5 Supply & Installation of Network Cabling & Equipment

**11. Software**
11.1 Firewall Software Purchase – Network security solutions
11.2 Developing Software Applications – Custom or in-house applications
11.3 Antivirus / Endpoint Protection Software - Protection against malware and viruses
11.4 Database Management Software – SQL, Oracle, or other database solutions
11.5 Operating System Software – Windows, Linux, or other OS licenses
11.6 Office Productivity Software – Word processors, spreadsheets, presentation tools
11.7 Backup and Recovery Software – Data backup, recovery, and disaster management tools
11.8 Cloud Services / Cloud-based Software – SaaS subscriptions, cloud storage solutions
11.9 Licensing and Subscription Management Software – License tracking, renewal management
11.10 Software Maintenance and Support Services – Updates, patches, and technical support

**CONDITIONS RELATED TO REGISTRATION**

1. The application should be prepared by the supplier on own as per the specimen given in the application. All applications should be submitted under registered post, cover marked as **"Registration of Supplies/services - 2026"** on the left hand corner of the envelop.

   The deposit slip and application for registration should be addressed to the **Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna.** Individual applicants are required to attach a copy of their Business Registration (BR). Registered companies should attach only their Business Registration (BR), Articles of Association (AOA), and Memorandum of Association (MOA). If available, applicants may also include their VAT registration, CIDA registration and NMRA License. Please avoid submitting any documents that are not listed above.
2. A separate application must be submitted for each main category of supply or service. Each application should include a copy of the deposit slip for a **non-refundable fee of Rs. 2,000/-, deposited to the Collection Account (Reference No. 850000390000926) at the People's Bank, University of Jaffna.** If an applicant selects one or more sub categories under the same main category, only a single fee of Rs. 2,000/- is required for that main category. If an applicant applies for multiple main categories, a separate fee of Rs. 2,000/- must be paid for each main category.
3. Organizations other than companies could register only for Supplies / Services according **to their general nature which specified in their Business Registration (BR), Article of Association (AOA) and Memorandum of Association (MOA).** Otherwise the application will be rejected without any notification.
4. Quotations for the year 2026 will be called from the registered suppliers. However, the University reserves the right to call for quotations from other sources or unregistered suppliers too.
5. Any supplier who fails to submit quotation when called for or fail to supply items / services in time or in uniformity with the stipulated specification may get his/her name struck off from the register without prior notice.
6. Those who register for the following item could include name, experience and qualifications of all Engineers and Architects permanently employed at your organization and provide CIDA Registration and specify the grade obtained (For the Item No 9.5,9.5,9.6,9.7,9.8,9.9,9.10,and 9.16)
7. Those who register for the following items (6.1 Laboratory Equipment and 6.2 Laboratory Chemicals & Glassware) shall submit a valid National Medicines Regulatory Authority (NMRA) License issued in the name of the organization.
8. Payment will be made to the Registered Name as appeared in the application. Therefore, suppliers should have the bank account for their business name. Further details may be obtained from the Asst. Bursar (Supplies-II) T.P No. 021 - 2226519. University of Jaffna.

**Registrar**
**University of Jaffna.**

**University of Jaffna**
**Registration of Suppliers for year 2026 Application**

**01. Personal Details**
1.1 Name in Full :……………………………
(As per the National Identity Card)
1.2 National I.D No :……………………………
1.3 Address :……………………………
……………………………
1.4 Permanent T.P No:……………Mobile No:……………Fax No:……………
1.5 Email Address :……………………………

**02. Business Details**
2.1 Name of the Business :……………………………
2.2 Business Registration No :……………………………
(Copy of Business Registration Certificate should be attached)
2.3 VAT No :……………………………
(If you are VAT registered supplier, Copy of VAT Certificate should be attached)
CIDA Registration No ………… Grade Obtained………… Expiry Date …………
2.4 Address :……………………………
……………………………
2.5 Permanent T.P No:……………Mobile No:……………Fax No:……………
(Please provide at least two contact numbers)
2.6 Email Address :……………………………
2.7 District :……………………………
2.8 Divisional Secretariat :……………………………

**03. Other Details**
3.1 Name of the Bank & Account No :……………………………
3.2 Credit Facilities :……………………………
3.3 ICTAD Registration No :……………………………
(For Engineering Services item 9.5,9.9only) If not registered with ICTAD Applicant can submit quotation for works not exceeding Rs.200, 000.00 (Two Hundred Thousand only).
3.4 NMRA License No :……………………………
(For Laboratory Items 6.1 and 6.2 only) Applicants without a valid NMRA License are not eligible to register for these categories.

**04. Details of Supply**

| Main Category No.(Eg:- 2) | Sub Category No. (Eg:- 2.2) | Name of the Sub Category (Eg:- Book, Magazines & other publications) |
|---|---|---|
| | | |
| | | |

**05. All Supply items should be delivered to the University of Jaffna**

**I/We agree to the conditions of Registration**

**Signature** :……………………

**Name** :…………………… **Date:**……………………

**Note**
Separate application should be sent for each category supply / services and each application should accompany with a deposit slip copy of Rs.2,000/= (nonrefundable deposit) drawn Deposit to the Account no 850000390000926 in the People's Bank, University of Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான பாதுகாப்பு; ஆசிரியர்களுக்குச் செயலமர்வு

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்தல் எனும் செயற்றிட்டத்தின் கீழ், பிள்ளைநேயக் கற்பித்தல் வாண்மையை விருத்தி செய்தல், சிறுவர் உரிமை மற்றும் பாதுகாப்புத் தொடர்பான இரண்டாம் கட்டச் செயலமர்வு, யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் அண்மை யில் இடம்பெற்றது.

யாழ். சமூகச் செயற்பாட்டு மையத்தின் அனுசரணையுடன், தீவகத்தின் வேலணை, காரைநகர், ஊர்காவற்றுறை, நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படும் சுய உதவிக் குழு அணுகுமுறை ஊடாகப் பெண்களை வலுப்படுத்துவதனூடாக, தீவக வலயத்தைச் சேர்ந்த 25 ஆசிரியர்களுக்குச் செயலமர்வு நடத்தப்பட்டது. யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் செயலமர்வை ஆரம்பித்துவைத்தார்.

செயலமர்வில் , யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.பா.தனபாலன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் கு.கமலநாதன், யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ந.தயாபரன், வேலணைப் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் நா.கிருஸாந்தினி மற்றும் யாழ். சமூகச் செயற்பாட்டு மையத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-66)

## வீடு விற்பனைக்கு

ஸ்ரேசன் வீதி, கிழக்கு கோண்டாவில் சந்தியில் இருந்து 150m தொலைவில், நல்ல குடியிருப்பு சூழலில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)

**WhatsApp: +94 77 220 1592**

(CS 55898 (A)) A



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு


- கல்வியில் முன்னேற்றம் இல்லையா?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?
- வளைகாப்பு சடங்கு முறைப்படி செய்து தரப்படும்.



இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்வும்.)

தொடர்புகளுக்கு :- **077 281 1234**

## மரண அறிவித்தல்



தோற்றம்
22 . 12 . 1952

மறைவு
12 . 11 . 2025

### வீரகத்தி கயிலாயபதி (கிளி)

**(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் - நீர்ப்பாசன திணைக்களம், வடமாகாண காணி நிர்வாகத் திணைக்களம்)**

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் வடக்கையும், தற்போது **154/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை** வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி கயிலாயபதி அவர்கள் கடந்த (12.11.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - பவானியம்மா தம்பதியரின் மருமகனும், ஞானேந்திரியின் பாசமிகு கணவரும், சுதாகர் (Software Engineer - Meta, UK), யாழினி (Doctor) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஞ்சீவன் (Doctor), ஜெயசுமங்கலா (Lecturer, UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் குஞ்சுத்தம்பி (Germany), காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன் மற்றும் தங்கராணி, கணேசமூர்த்தி (Germany), கலாவதி (Swiss) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாஸ்கரன் (ஓய்வுநிலை அதிபர்), வாகீசன் (ஓய்வுநிலை அதிபர்), தேவரஞ்சன் (France), நந்தபூபன் (QS, Australia), யோகேந்திரி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **இன்று (16.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில்** அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 954 3968 (மகன்),**
**077 213 2294 (மகள்)**

**154/2, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CR 59914) E

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Light Vehicle Driver | 0772290222 |
| Female Warden | 0776931291 |
| Collection Officer | 0772349939 |
| IT Officer | 0772290222 |
| Clerk | 0755489898 |
| Barman/Waiter | 0707896621 |
| பொதி சுமப்பவர் | 0777110075 |
| Room Attendent | 0707896621 |
| Granite & Tile Workers | 0773580547 |
| காசாளர் | 0766292830 |
| Graphic Designer | 0771659845 |
| Receptionist(vavuniya) | 0773501095 |
| Data Entry Operator | 0705050009 |
| Voice Over,Video Creator | 0767042891 |
| Sales Executive | 0779348512 |
| Accountant | 0761287897 |
| தோட்ட உதவியாளர் | 0771386954 |
| Marketing Executive | 0772025118 |
| இறைச்சி மீன் வெட்டுபவர் | 0706053194 |
| Marketing Executive | 0704141333 |
| Business Manager | 0721392593 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக
யாழ் வேலைவாய்ப்புகளுக்கு :


**dewmasweb.com**

**வேலையாட்கள் தேவையா?**

**0777733368**

**DEWMAS**, 51, Amman Road, Nallur

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
24
04
1972

விண்ணில்
16
11
2020

# அமரர் சொக்கநாதன் பிரபாகரன்

வசிப்பிடம் பம்பலப்பிட்டி
பாடசாலை – கொழும்பு இந்து கல்லூரி

நீங்கா நினைவில்
குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்

தகவல் மூத்த சகோதரர் சொக்கநாதன் கேதீஸ்வரன் உரிமையாளர்

**Nathan & Brothers**
197, 197A, 197B, 4th Cross Street, Colombo-11. T/P: 011 2323819

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழிறங்கிய வீதி வரணியில் சீரமைப்பு

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் வரணி வடக்கு தம்பான் பகுதியில் நீர்க்குழாய்கள் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது, தாழிறங்கிய பகுதி சீரமைக்கப்பட்டுவருகின்றது.

வீதியோரமாக அமைந்துள்ள குளத்தின் கரையோரமாக நிலத்தை அகழ்ந்தபோது வீதியின் ஒரு பகுதி தாழிறங்கி ஆபத்தான நிலையில் காணப்பட்டது. இதனால் ஒரு வழிப்பாதை மட்டுமே போக்குவரத்துக்குப் பயன்படுத் தப்பட்டது. இந்த நிலையில் இதனைப் பார்வையிட்ட அதி காரிகள் விரைந்து செயற்பட்டு தாழிறங்கிய பகுதியைச் சீர்செய்யும் பணிகளை முன்னெடுத்துள்ளனர். (க-159)


## வலி - கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் வ-து

### நீர் சுத்திகரிப்பு இயந்திரத்திற்கான கூறுவிலை கோரல்

மேற்படி எமது சங்கத்திற்கு (ஒரு மணித்தியாலத்திற்கு 500L சுத்திகரிப்பு) நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்துவதற்கு தகுந்த நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.எனவே 30.11.2025 திகதிக்கு முன்னர் எமது அலுவலகத்திற்கு நேரடியாகவோ அல்லது கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ தங்களது கூறுவிலைகளை அனுப்பி வைக்கமுடியும்.

குறிப்பு: இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலத்திற்கு தொடர்பு கொள்ள முடியும்.
விண்ணப்பப் படிவத்தினை எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

தலைவர்,
வலி-கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர்,
விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) நீர்வேலி.
தொ.பே.இல : 0779232462, 0767111168,
0762626241

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரிக்கு
அருகாமையில்
வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 077 286 6429
(CR/43998) J-1

## காணி விற்பனைக்கு

நெல்லியடி கொடிகாம வீதியில், கரவெட்டி மத்தியில் (தேவாலயத்திற்கு முன்பாக) சரஸ்வதி வித்தியாலய வீதியில் அமைந்துள்ள 18 பரப்பு காணி (94 பனைகள் உள்ளன) விற்பனைக்குண்டு. இக் காணிக்கு இரு பக்க பாதைகள் உள்ளன.
தொடர்புக்கு: 0760 321 084

## அறை வாடகைக்கு

யாழ் நகரில் படிக்கும்,
வேலைபார்க்கும்
ஆண்களுக்கு.
தொடர்புகளுக்கு:-
077 491 9107
(CS/59922) J-1

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் அமைந்துள்ள ஒரு ஹோட்டலுக்கு ஆண் தொழிலாளர்கள் மற்றும் யாழ்ப்பாண உணவுகளை சமைக்கக்கூடிய ஒரு சமையல்காரர் தேவை.
உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.
மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-
தொடர்புகளுக்கு:-
077 676 6437, 077 134 5588
(CS/59793) J-1

## B N Associates

**Chartered Accountants**
**Audit/ Accounts Trainee**

- Student of CA/ACCA or equivalent
- Knowledge of computer literacy is must
- A team player with positive mindset

Email your CV: niranjan.bnassociates@gmail.com
Or
WhatsApp: 0772316608
No.95, Point pedro Road, Ariyakulam, Jaffna
(CS/59919) J-1


## மரண அறிவித்தல்



### சண்முகலிங்கம் (அப்பி) கனகமணி

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான சண்முகலிங்கம் கனகமணி கடந்த (04.11.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (மாணிக்கம்) - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவகுரு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகலிங்கம் (அப்பி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவரான தவமணியின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், மகேஸ்வரி, சுந்தரலிங்கம், அமுதலிங்கம், கதிர்வேல் மற்றும் கமலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கோமதிதேவி (இலங்கை), தயாபரன் (சுவிஸ்), காலஞ்சென்ற சுதாகரன், மற்றும் திசோகரன் (லண்டன்), தனீஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார். நாகராசா, மங்கையக்கரசி (இலங்கை), காலஞ்சென்ற கர்ணாகரன், மகேஸ்வரி (இத்தாலி) ஆகியோரின் சிறியதாயாருமாவார். காலஞ்சென்ற இராஜேஸ்வரன் (இலங்கை), மற்றும் ஜெனி (சுவிஸ்), கோமதி (லண்டன்), திவ்வியா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயந்தா - சபேஸ் (பரிஸ்), திவாகரன் - றக்ஷாயினி, சஜந்தன் (இலங்கை), சாஜிந்தன் - தனிகாகண்மனி, சுதாஜினி - அலெக்சாண்டர் மோசர், சுதாகரன் - சலோமி, ஜெனுசன், சகிலா (சுவிஸ்), ரமணா, வர்சா, ஜனுசா (லண்டன்), தீபிகன், அபிஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார். ஜெய்தன்ஆரோன், இலேசாலியா (சுவிஸ்), சஜெய், சஞ்ஜேய், சஜெனா (பரிஸ்), சாயிசன் (இலங்கை) ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (16.11.2025) ஞாயிற்றுக்கிழமை 79, Dickerage Roade Kindgston Surrey KT1 3SR எனும் இடத்தில் முற்பகல் 10.30 மணி முதல் 01.00 மணிவரை மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரிகைக்காக South London Cremarotium Rowan Road London SW16 5JG என்னும் இடத்தில் அடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோமதி தேவி : 0773288107 இலங்கை
திசோகரன் : +4474660615 லண்டன்
தனிஸ்கரன் : +447727338153 லண்டன்
தயாபரன் : +41775075195 சுவிஸ் (CS/59923) J-1

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மண்ணுலகில்
10 . 05 . 1941



விண்ணுலகில்
12 . 11 . 2025

### அருட்சகோதரி மேரி சிப்பிரியன் வரப்பிரகாசம்

**(திருக்குடும்ப கன்னியர் சபை - யாழ்ப்பாணம்)**

**இவரது மேய்ப்புப்பணித் தளங்கள் நாரந்தனை, இளவாலை, நெடுந்தீவு, பண்டத்தரிப்பு, உடுவில், மாதகல், மிருசுவில், பருத்தித்துறை, யாழ் ஆயர் இல்லம், உருத்திரபுரம், புதுக்குடியிருப்பு, மடு, நானாட்டான், பேசாலை, பண்டிவிரிச்சான், பறப்பாங்கண்டல், வவுனியா, மட்டக்களப்பு, சொறிக்கல்முனை, பம்பலப்பிட்டிய**

யாழ்ப்பாணம் குருசோல்ட் வீதியை பிறப்பிடமாகவும், இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருட்சகோதரி மேரி சிப்பிரியன் வரப்பிரகாசம் அவர்கள் 2025ம் ஆண்டு கார்த்திகை மாதம் 12ம் நாள் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம் - செபஸ்தியம்மா தீம்பதிகளின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான சபீனா டானியேல், அருட்சகோதரி லியோ (தி.கு.க) அவர்களின் பெறாமகளும், மேரி மாகிறெட் (குணமணி), அருட்பணி பிரான்சிஸ் டானியேல் (அ.ம.தி), அருள் எட்மன், பத்மராணி லியோ (ஜெயமணி), மேரி நவமலர் புவனேந்திரன் (நவமணி), லெஸ்லி ஜோண்சன், மேரி மாசில்லா நாகேந்திரராஜா (செல்லா) அனற்ரன் இருதயராஜ் (ராஜீ), காலஞ்சென்றவர்களான மேரி மெக்டலின் ஜோசப், மேரி திரேசா தங்கநாயகம் (யோகமணி), வின்சன்ட் லோகேந்திரன் (லோகா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 2025ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17ம் நாள் திங்கட்கிழமை இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட சிற்றாலயத்தில் காலை 08.00 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 59920) E

தொடர்புகளுக்கு:
வேர்ஜினி : 077 436 4832
[illegible] : 077 228 8224

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

மோட்டார்சைக்கிள்
எலக்ரோனிக் மொடல்
**120CC, YADEA - TS**
**10 KM**
தொடர்புகளுக்கு:-
**077 652 8639**

(CS/59927) J-1

**விற்பனைக்கு**

சுத்தமான கலப்படம் அற்ற வேப்பம் எண்ணெய். வேப்பம் புண்ணாக்கு விற்பனைக்கு உண்டு. வேப்பம் எண்ணெய் ஊற்றிக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **077 99 74 311**

(CS/80728) A

# கப்பலில் ஐஸ் போதை; 7 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, நவ.16

கிரிந்த கடற்கரையில் கப்பலொன்றில் ஐஸ் போதைப்பொருளுடன் 7 சந்தேகநபர்கள் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேல் மாகாண வடக்குக் குற்றப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

அவர்களிடமிருந்து, 329 கிலோ ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுS; ளது.

இந்தப் போதைப்பொருள் கையிருப்பின் மதிப்பு சுமார் 394 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய, 6 வாகனங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைக்காக, சந்தேகநபர்கள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(ச-இ)

**பணி வெற்றிடங்கள்**

**Organization - Sabrish Rice Mill**

➤ **Post - Sales Ref (விற்பனைப் பிரதிநிதி)**
Colosing Date - 25.11.2025
பணி நிலை வெற்றிடங்கள் - 03 ஆண்கள் மட்டும்
வயது எல்லை - 25 - 45 வயது

**Qualifications**
- கா.பொ.த உயர்தரம் கல்வி இருத்தல்.
- 04 years முன் அனுபவம்.

**Conditions**
- 100% நம்பகத்தன்மை.
- வியாபார யுக்திகளை கையாளும் ஆளுமை.
- விற்பனை காசு மற்றும் காசோலைகளுக்கு 100% பொறுப்பாக செயற்பட வேண்டும்.

**Basic Salary : 30000/=**
**Note :** Order based sale for capital amount 0.5% aditional salary

➤ **Post - Accountant (கணக்காளர்)** வயது : 35 -45

**Note:**
நேர்முகத் தேர்வு மூலம் மட்டும் தெரிவு செய்யப்படுவார்கள். தகமையுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
இல 05, புதுமுறிப்பு,
கிளிநொச்சி
**077 667 8395**

(CS 59924) E

**வெற்றிடங்கள்**

கூலிவேலை, மில் வேலை, களஞ்சியக் காப்பாளர், கணணி அனுபவமுள்ளவர்கள் தேவை.

தொடர்பு:- **077 772 2215**

**Angel International School, Manipay**

**VACANCIES FOR TEACHERS**
**English Medium**

1) Mathematics
Requirements
* BSc in Mathematics
* Able to Teach Cambridge Curriculum (Pure maths, Mechanics & Statistics)
* Minimum 3 Years of Commitment

2) Physical Education
Requirements
* BSc in Physical Education

*Salary negotiable*

**Contact us 0212225628** (Weekdays: 7.30am to 3.30pm)
*Please send us your cv to angelism2006@gmail.com*

Angel International School, Mathers Lane, Manipay

**யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள பிரதானசிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்.**

**01.01.2026 தொடக்கம் 31.12.2026 வரை**

யாழ் போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான/ தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துநர்களிடமிருந்து 01.01.2026 தொடக்கம் 31.12.2026 வரையான காலப்பகுதிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள பிரதான சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

1. வைத்தியசாலை பகுதியில் உள்ள பிரதான சிற்றுண்டிச்சாலை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது.
2. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் 'கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம் என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 16.11.2025 தொடக்கம் 01.12.2025 வரையான காலப்பகுதியில் (மு.ப) 09.00 மணி தொடக்கம் (பி.ப) 03.00 மணிவரை (பி.ப 12.30 தொடக்கம் பி.ப 01.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் 21.11.2025 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கணக்காளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
4. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ரூபா 100,000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும் 'கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
5. விண்ணப்பப்படிவங்களை பெற வரும் போது உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும், குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும், மற்றும் சுகாதாரப்பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. விலைக் கேள்விகள் 01.12.2025 திகதி (பி.ப) 03.00 மணிக்கு முன்பதாக இவ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தங்களால் பயன்படுத்தப்படும் சமையற்கூடமானது வைத்தியசாலையிலிருந்து 10கி.மீ க்குள் உட்பட்டிருப்பதுடன் உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொடர்பாக அப்பகுதிக்குரிய பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியினது **உணவு கையாளும் தரச்சான்றிதழ்** இணைக்கப்பட வேண்டும். அதனை எமது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினரால் பரிசீலனை செய்யப்படும்.
8. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க் காட்டப்பட்ட முகவரியில்/தொலைபேசி இலக்கத்துடன் 021-222 2261 (Exchange No 226) தொடர்பை ஏற்படுத்திக் பெற்றுக்கொள்ளலாம்.
9. கிடைக்கப் பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.
10. மேற்படி வைத்தியசாலையின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்தியசாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப் பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்த காலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

**தலைவர்/பிராந்திய பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(CS 46300) E

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 09 . 1942



மறைவு
11 . 11 . 2025

**ஐயம்பிள்ளை தவயோகராஜா**

**(ஓய்வுபெற்ற நடத்துனர் - இலங்கை போக்குவரத்து சபை)**

அம்பலவாணர் வீதி, உடுவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை தவயோகராஜா அவர்கள் கடந்த (11.11.2025) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பேர்ணடேத் (தங்கமணி) அவர்களின் அன்புக் கணவரும், பிறேமினி, பிரகாஷ், பாமினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ் (வடிவு), திருஜா, ஜெயந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிதேஷ், டனிஷ், மாதேஷ், ஜெனுஷன், பானுஷன், பிறினுஜா, சஸ்வின், சிவானி, சஜீஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான புஸ்பமலர், தேவமலர், நல்லம்மா, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான விக்ரோறியா, ஞானமணி, அலிஸ், ஜோசப் மற்றும் ஜோர்ஜ், வேதநாயகம், றோசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி நாளை (17.11.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புனித செபமாலை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**அம்பலவாணர் வீதி,**
**உடுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 300 6593**

(CS/59925) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்நாற்றத்துடன் கழிவுநீர் வெளியேற்றம் உணவகத்துக்கு 10,000 ரூபா தண்டம்!

யாழ்ப்பாணம்,நவ.16

உணவகத்திலிருந்து சுகாதாரச்சீர்கேடு மற்றும் கிருமித்தொற்று அபாயத்தை ஏற்படுத்தும்வகையில் கழிவுநீரை வெளியேற்றிய உணவக உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் வீதியோரமாக உள்ள சுவரின் ஓட்டை வழியாக உணவகத்திலிருந்து கழிவுநீர் துர்நாற்றத்துடன் வெளியேறியுள்ளது.

இது தொடர்பில் பொதுமக்களால் நகரசபைக்குத் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து மேற்கொண்ட சோதனையில் உணவகத்தின் கழிவுநீர் தொட்டியில் இருந்து இயந்திரத்தின் மூலம், சுவரின் ஓட்டை வழியாக வீதிக்கு வெளியேற்றப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கு விசாரணையின் போது, உணவக உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து, 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-100)

## 'நீரிழிவுப் பேரழிவு' யாழில் நடைபவனி

யாழ்ப்பாணம், நவ.16

சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனி நேற்றுமுன்தினம் யாழ்.நகரில் இடம்பெற்றது. இதில் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதிய மாணவர்கள், பேராசிரியர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-17,20)




**காணி விற்பனைக்கு**

இளவாலை, சிறுவிளான், ஞானோதயா வாசியசாலை வீதியில், காப்பற் வீதியில் இருந்து 200m தொலைவில், நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள, பண்ணை அமைப்பதற்கான கட்டுமானங்களுடன் கூடிய 6.5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை)

WhatsApp: +94 77 220 1592

(CS 59898 (C)) A







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை மாணவர் சங்கத்தின் 20ஆவது ஆண்டு விழாவை யொட்டி சாட்டி கடற்கரையில் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டது. கடலோரச் சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் சமூகப் பொறுப்புணர்வையும் மேம்படுத்தும்நோக்கில் இந்தச் சிரமதானம் இடம்பெற்றது. (ச–27)


## கடை Shop விற்பனைக்கு

K.K.S Road மல்லாகத்தில் கடை விற்பனைக்கு. இது 20'X10' கொண்ட மேல்/கீள் தள கடைகள் உண்டு. அத்துடன் அருகில் இதே அளவு கொண்ட காணித்துண்டு நீர் வசதியுடன் உண்டு. மொத்த நிலப்பரப்பு 20'X20' உடையது.

தொடர்பு:- **077 724 7802**

## மணமகள் தேவை

1996, இந்து, பூசம், DOCTOR,
பூர்வீகம் - யாழ்ப்பாணம்,
வதியுமிடம் - வவுனியா
மணமகன் பதிவு இல : 12225
தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே. இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## மணமகன் தேவை

1996, இந்து, விசாகம், DOCTOR,
பூர்வீகம் - மானிப்பாய்,
வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல : 12210
தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே. இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## வீடுகள் விற்பனைக்கு உண்டு

வெள்ளவத்தையில் நிறைவடையும் தறுவாயில் உள்ள apartment ல் 2 Rooms, 2 Toilets, Hall, Kitchen 975 sqft வீடுகள் காலி வீதிக்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
**077 831 6333**

## வீடு வாடகைக்கு

கைதடி - மானிப்பாய் பிரதான வீதியில் (உடுவில் மகளிர் கல்லூரிக்கும் மரதனார் மடம் சந்திக்கும் இடையில்) சகல வசதிகளுடன் கூடிய, நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள மேல் மாடி வீடு (3000 sq.ft) வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
(தரகர் தேவையில்லை)

**WhatsApp: +94 77 11 55 909**

## உடனடியாகத் தேவை

- Salesman (18 to 50 வயது)
- Sales Girls (18 to 35 வயது)

**யாழ்ப்பாணம் அல்லது பிற மாவட்டங்களிலிருந்து Salesman & Sales Girls தேவை.**

- அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரர்கள் அல்லது தொடக்கநிலையாளர்கள் விண்ணப்பிக்கலாம்.
- ஜவுளி வியாபாரத்தில் ஆர்வம் உள்ளவராக இருக்க வேண்டும்.
- வெளி நகரத்திலிருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி வழங்கப்படும்.
- தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

Contact : 077 222 9772 / 076 979 0684
WhatsApp : 077 222 9772








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

மலர்வு
18
❖
04
❖
1972



உதிர்வு
13
❖
11
❖
2025

### திரு. சுப்பிரமணியம் முகுந்தன்

(பொறியியலாளர் – இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)
( பழைய மாணவர் கொழும்பு றோயல் கல்லூரி)

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கொள்ளுப்பிட்டி/ தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சு.முகுந்தன் 13.11.2025 வியாழக்கிழமை மாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர்களான சுப்பிரமணியம், கமலாதேவி ஆகியோரின் இளைய மகனும், அமரர் க.வை. சுந்தரராசா, திருமதி கமலாம்பிகை (சித்தன்கேணி) ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி பவானியின் (இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்) அன்புக் கணவரும் சாயலன் (றோயல் கல்லூரி– 10D) வியாபினி (சைவ மங்கையர் வித்தியாலயம் – 3D) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், அழகேசன் (கனடா) ஆதித்தன் (Computer System Limited) ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dr.கயல்விழி, Dr.தமிழ்ச்செல்வி (தேசிய கண் வைத்தியசாலை) Dr. தேவானந்தர், (USA) நேசானந்தர் (கனடா) Dr. சர்வானந்தர் (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை), பிரம்மானந்தர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 15.11.2025 சனிக்கிழமை ஸ்கொபீல்ட் பிளேஸ், கொள்ளுப்பிட்டி இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் பொரளை ஜயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்று மாலை 3.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று மாலை 6.00 மணிக்கு பொரளை மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
(0772 972 796)

## பிரதிப்...

அதிகாரிகள் பலருக்கு இடமாற்றங்கள் மற்றும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிய திலக் தனபால வட மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (அ-ம-26)

## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி**
**சிப்ரியன் வரப்பிரகாசம் தி.கு**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி சிப்ரியன் வரப்பிரகாசம் தி.கு கடந்த 12.11.2025 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (17.11.2025) திங்கட்கிழமை மு.ப 08.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:**
**அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்**
**மாகாணத் தலைவி.**
**121, பிரதான வீதி**
**யாழ்ப்பாணம்.**

(CR 46510) A

## ஐஸ்...

காங்கேசன்துறை மாவட்ட குற்றத்தடுப் புப் பிரிவுப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
சந்தேகநபரிடம் இருந்து 14 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-26)


## படகுகள்...

படகும், மீன்பிடி நடவடிக்கைக்காகப் புறப்பட்ட படகும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. இதையடுத்து, மீனவர் ஒருவர் காயமடைந்த நிலையில், அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-56)



## மரண அறிவித்தல்

மண்ணில்
01
.
08
.
1935



விண்ணில்
11
.
11
.
2025

### தம்பையா வைத்திலிங்கம்

யாழ். மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய், பிரித்தானியா இலண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா வைத்திலிங்கம் அவர்கள் கடந்த 11.11.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் ஆசை மருமகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, முத்துக்குமார், கனகாம்பிகை, வேதநாயகி, இரத்தினசிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும், சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், Dr. ரவீந்திரன் (ரவி), நகுலேந்திரன் (நகுலன்), லோகநந்தினி (நந்தினி), கேமராகினி (கேமா), பிரபாகரன் (பிரபா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. கிளாரா, சிவரூபி, நிரஞ்சன், ரூபகுமார், கீதா ஆகியோரின் அன்பு மாமனாரும், உமா, பரிதி, பிரக்ருதி, Dr. சுருதி, பகலவன், அகலவன், சதுர்சன், பவித்ரா, வாகினி, வாசகி, பரணி, நிலவன், மிதுலன், நித்திலன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சின்னம்மா, தவமலர், இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2025) ஞாயிற்றுக்கிழமை UK இல் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ரவி (மகன்) - +447748834819**
**நகுலன் (மகன்) - +447767617558**
**நந்தினி (மகள்) - +447713112845**
**கேமா (மகள்) - +447527308752**
**பிரபா (மகன்) - +447956390669**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS 3053) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
07
.
01
.
1954



மறைவு
15
.
11
.
2025

### மோகனதாஸ் மேரிஸ்ரெலா

யாழ்ப்பாணம் பெரியவிளான், இளவாலையை பிறப்பிடமாகவும் பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட மோகனதாஸ் மேரிஸ்ரெலா அவர்கள் நேற்று (15.11.2025) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - மேரியோசேப் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பற்றிமாதேவி, மற்றும் நா.புஷ்பதேவி (வவுனியா), அ.சாகாயநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு சகோதரியும், மோ.ஜீர்த்தன் (Sunshine Pharmaceutical-Field Manager) இன் பாசமிகு தாயாரும், ஜீ.தனோஜாவின் அன்பு மாமியாரும், சுஜஷ்வின், பிஹாஷ்வினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், கலைச்செல்வி (வவுனியா), அருட்செல்வி (வவுனியா), கலைவாணி (லண்டன்), கஜேந்திரன் (பிரான்ஸ்), விஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியதாயும் அனித் (சுவிஸ்) இன் அன்பு மாமியும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்கம் நாளை (17.11.2025) திங்கட்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அன்னாரின் தற்போதைய வதிவிடத்திலிருந்து யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை ஆலயத்திற்கு (OLR) திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் பெரியவிளான் புனித யுவானியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாண்டியந்தாழ்வு

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS/59928) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

கடந்த 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உருவான காற்றுச் சுழற்சி நகர்வதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கன மழைக்கான மழை மேகங்கள் உருவாகத் தொடங்கியுள்ளன. இதனால் நேற்று ஆரம்பித்துள்ள மழை எதிர்வரும் 20ஆம் திகதி வரை தொடரும்.

கனமழைக்கு வாய்ப்புள்ளமையால் தாழ்நிலப் பகுதிகளிலுள்ள மக்கள் மிகவும் அவதானமாக இருப்பது சிறந்தது. விவசாயிகள் அதற்கேற்ற வகையில் தமது நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டும் - என்றுள்ளது. (அ-ம-66)

## தெளிவான...

எடுக்க வேண்டும் அவரிடம் வலியுறுத்தியுள்ளோம் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தொல். திருமாவளவனுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் பின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசாங்கம் தவறான பரப்புரையை முன்னெடுத்து வருகின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலுடன் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தை கைவிட்டு விட்டனர் என்றும், தமது தீர்வை ஏற்பதற்குத் தயாராகியுள்ளனர் என்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறி வருகின்றது. இவ்வாறான நெருக்கடியான நிலையில்தான் தற்போதைய அரசமைப்பும் உருவாக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தவிர ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பொது நிலைப்பாட்டுக்கு வந்து அறுதிப் பெரும்பான்மையை காட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடன் நாம் பேச முயற்சித்தோம். அந்த முயற்சி சுமந்திரன் தமிழரசுக் கட்சியின் செயலாளராக வந்த பிறகு முறிக்கப்பட்டது.

ஜனாதிபதியுடன் சந்தித்துப்பேச தமிழரசு நடவடிக்கை எடுக்கும் தருணத்தில் தொல். திருமாவளவனுடன் சந்திப்பு நடத்தப்பட்டது. தமிழினப் பிரச்சினைக்கு இந்திய நிலைப்பாடு முக்கியம். இந்திய-இலங்கை ஒப்பந்தம் என்பது தமிழ் மக்களின் தீர்வு சம்பந்தமாக உத்தியோகபூர்வமாக இலங்கை அரசை ஏற்க வைத்த ஒப்பந்தமாகும். அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது என்ற பெயரில், இலங்கை அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றிய 13ஆம் திருத்தம் என்பது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை மறுத்தது. தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை ஒற்றையாட்சிக்குள் 38 வருடங்களாக முடக்கப்பட்டு தமிழ் மக்கள் எந்தப் பலனையும் அடையாமல் இருக்கும் சூழலில், இந்தியா தவறான நிலைப்பாட்டை வலியுறுத்துவது எமக்கு பலவீனத்தை ஏற்படுத்துகிறது. இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் இந்திய மத்திய அரசு தனது நிலைப்பாட்டை மாற்ற வேண்டும்.

இந்தியாவுடன் இணைந்து போகாமல் இலங்கையின் பொருளாதாரத்தை மீள உயர்த்த முடியாத நிலை உள்ளது. இது இந்திய மத்திய அரசின் பேரம் பேசலுக்கான தன்மைகளை அதிகரித்துள்ளது. அதனை ஈழத்தமிழர்கள் பயன்படுத்த வேண்டும். அந்தவகையில் தொல். திருமாவளவனை சந்தித்து இந்த விடயங்களை தெளிவுபடுத்தினோம்.

அவர் தமிழக ஆட்சியில் முக்கியமான பங்காளி. ஈழத்தமிழர் உரிமைகள் தொடர்பாக திமுக ஆட்சியில் தெளிவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என பேசினோம். ஈழத்தமிழர் தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டை தமிழக அரசு எடுக்க வலியுறுத்துவதற்கு தொல். திருமாவளவன் அத்தியாவசியமானவர். விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டு இன்று வரை இன அழிப்புக்கு முகம் கொடுக்கிறோம். உயிர்கள் போகாவிட்டாலும் தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குறியாகி கொண்டு வருகிறது. பொருளாதார ரீதியிலும் தமிழ்த் தேசம் பலவீனப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்த பின்னர் ஈழத்தமிழர்களின் நிலைப்பாடு தொடர்பில் தமிழக அரசு அமைதியாக இருப்பது ஈழத்தமிழர்களை பலவீனப்படுத்தி இன அழிப்புக்கு உள்ளாக்கும். தமிழகத்தில் உள்ள அனைத்து தரப்புகளையும் தமிழ் தேசிய பேரவை அணுகத் திட்டமிட்டுள்ளது. தமிழ்த் தேசம், இறைமையுடனான சமஷ்டியை கோர தமிழகத்தின் அனைத்துத் தரப்பினரும் வலியுத்தும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக இந்த சந்திப்பு அமைந்தது - என்றார். (அ-ம-26)

## மாகாணத்...

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அஞ்சுவதாக முன்வைக்கப்படும் எதிரணிகளின் குற்றச்சாட்டை நாங்கள் திட்டவட்டமாக நிராகரிக்கின்றோம். அடுத்த வருடம் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். எதிரணிகள் கூட்டணி வகுத்து வந்தால்கூட ஆளுங்கட்சியே வெற்றிநடைபோடும். இதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை - என்றார். (அ-ம-44)

## காற்றாலைக்கு...

போராட்டத்தை முன்னின்று நடத்திவந்த மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மாக்கஸ் அடிகளார் இது தொடர்பில் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

மன்னாரில் அமைக்கப்பட்டுவரும் காற்றாலை மின்திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த 105 நாள்களாக இடம்பெற்ற போராட்டத்தை இன்றுடன் நிறைவு செய்வதற்குத் தீர்மானித்துள்ளோம். ஜனாதிபதி அநுர அமைச்சரவை ஊடாக வெளியிட்ட அறிவிப்புத் தொடர்பில் நாங்கள் பரிசீலனைகளை மேற்கொண்டோம். நாங்கள் எத்தகைய கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டோமோ அவை நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஆதலால், 105ஆவது நாளான இன்றுடன் எமது போராட்டத்தை நிறைவு செய்வதாக நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

கனியமணல் அகழ்வுக்குத் தடை விதிக்க வேண்டும் என்ற எங்களின் கோரிக்கையை முற்று முழுதாக ஏற்றுக் கொள்வதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. கனிய மணல் தொடர்பில் தேசியக் கொள்கைகள் வகுக்கப்படவுள்ளன என்ற தகவல் எமக்குக் கிடைத்துள்ளது. அது நிறைவேறும் என நம்புகின்றோம் - என்றார்.

போராட்டக்குழுவின் சார்பில் மன்னார் மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரனிடம் மனுவொன்றும் வழங்கப்பட்டது. இதன் போது, மன்னார் மறைமாவட்ட ஆயர் எஸ். ஞானப்பிரகாசம் ஆண்டகை, மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளி பிரதம மௌலவி எம். அஸீம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ-ம-56)

## ராஜபக்சக்கள்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் போர் முடிவுக்கு வந்தது. அதற்காக அவர்தான் போரை முடிவுக்குக் கொண்டுவந்தார் என்று கூறிக்கொள்ள முடியாது. முப்படையினர்தான் போரை முடிவுக்குக் கொண்டுவந்தனர். போரை வைத்து ராஜபக்சக்கள் பணம் ஈட்டினார்கள். அவர்களின் எண்ணம் ஒருபோதும் நாட்டின் நன்மைக்காக இருக்கவில்லை. உண்மையில், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அமைதியை ஏற்படுத்துவதே மஹிந்தவின் எண்ணமாக இருந்தது. இதனால்தான் புலிகளுக்குப் பணம் வழங்கப்பட்டு, வடமாகாண மக்கள் தேர்தல் வாக்களிப்பில் இருந்து விலகியிருக்குமாறு பணிக்கப்பட்டது. ஆயுதக் கொள்வனவில் மோசடி, அதிகாரத்தை தக்கவைத்தல் போன்ற நடவடிக்கைகளையே ராஜபக்சக்கள் முன்னெடுத்தனர் - என்றார். (அ-ம-44)

## மனித...

உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் தற்போது பட்ஜெட் விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. அங்கு அவர் நேற்றுத் தெரிவித்ததாவது:-

வெள்ளையர்கள் இலங்கையை விட்டு வெளியேறும்போது ஆசியாவில் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதார நாடு என்ற அந்தஸ்தைக் கொண்டிருந்தோம். ஆனால், இன்று எமது நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. இதற்குக் காரணம் இனவாத ஆட்சியாளர்கள்தான். இனவாத ஆட்சியாளர்களே இந்த நாட்டில் திட்டமிட்டுப் பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கினார்கள். முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவால் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் சிறுபான்மை மக்களின் உரிமைகளை சின்னாபின்னமாக்கியது. மிகவும் பயங்கரமான அம்சங்களை உடைய அந்தச் சட்டத்தால், மனித உரிமை மீறல்கள் ஏற்பட்டன. பேரவலங்கள் அரங்கேறின. தற்போதைய ஆளுங் கட்சியினரும் இந்தச் சட்டத்தால் பெரும் துன்பங்களை எதிர்கொண்டனர். எனினும், அந்தச் சட்டம் இன்னமும் நீக்கப்படவில்லை என்பது வேதனைக்குரிய விடயம். போர்க்காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்பட வேண்டும் உண்மைகள் கண்டறியப்பட்டு நீதி நிலைநாட்டப்படுவதும், மீள நிகழாமையை உறுதி செய்வதும் அவசியம் - என்றார். (அ-ம-44)


# உடனடி வேலைவாய்ப்பு



யாழ். நகரில் இயங்கும் நிறுவனத் திற்கு பின்வரும் பணிவெற்றிடத்திற்கு வேலையாட்கள் தேவை.

**1. மேற்பார்வையாளர் (Supervisor)**

- வயதெல்லை: 30-50
- சம்பளம் : அனுபவத்திற்கு ஏற்ப பேசித் தீர்மானிக்கப்படும்.
- இரண்டு மொழி திறமையுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தகுதியுடையவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு : 077 120 9998**

# சாரதி தேவை



யாழ். நகரில் இயங்கும் நிறுவனத் திற்கு பின்வரும் பணிவெற்றிடத்திற்கு வேலையாட்கள் தேவை.

**1. சாரதி (Driver)**

தகுதியுடையவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு**

**077 120 9998**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆட்கள் தேவை

**யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரபல நிறுவனத்திற்கு ஆட்கள் தேவை:**

- விற்பனை பிரதிநிதி (Sales Representative)
- பயிற்சி பெறும் விற்பனை பிரதிநிதி (Trainee Sales Representative)

- சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்
- தகுதி உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- வயது எல்லை - 24 -35.
- யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

Cv கீழுள்ள whatsapp க்கு அனுப்பவும்:

தொலைபேசி : +94 77 790 6325

மின்னஞ்சல் : jaffna@lionagents.lk

(CS/59916) J-1

## வேலைவாய்ப்பு

**சுன்னாகத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்திற்கு (Computer Billing) செய்யக்கூடியவர்கள் / பழக விரும்புவர்கள் தேவை.**

தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

**ஆண்கள் மட்டும்.**

தகைமைகள் :

அடிப்படை கணினி அறிவு அவசியம்.

வயதெல்லை : 20 - 30 வயதுவரை

தொடர்புகளுக்கு:-

**070 401 6775**

(CS/59890) J-1


## ஐந்தாவது...

தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கை பொருளாதாரப் பேரழிவில் வீழ்ந்து திவால் நிலையை அடைந்த பின்னர், நாணய நிதியத்தின் உதவியை நாடியிருந்தது. இதுவரை நான்கு கட்டங்களாக இந்த நிதியுதவிகள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், ஐந்தாம் கட்டக் கடனுதவி தொடர்பிலேயே தற்போது நாணய நிதியம் பரிசீலனையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் வருடாந்த பட்ஜெட்டை ஜனாதிபதி அநுர நவம்பர் மாதம் 7ஆம் திகதி முன்வைத்திருந்தார். அந்த பட்ஜெட்டில் உள்ள அம்சங்கள் தமது நிபந்தனைகள் மற்றும் திட்டங்களு டன் ஒத்துப்போகின்றதா என்பது தொடர்பான ஆய்விலேயே நாணய நிதியத்தின் பிரதானிகள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் பட்ஜெட், நாட்டின் நிதித்திறனை அதிகரிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டால் மட்டுமே நாணய நிதியத்தின் அடுத்தகட்ட கடனுதவிகள் இலங்கைக்குக் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)


## வீட்டுப் பணிப்பெண் தேவை

**நல்லூரில் வைத்தியர் ஒருவரின் வீடொன்றிற்கு பகல் நேர தினசரி சமையல் மற்றும் வீடு சுத்தம் செய்வதற்கு பணிப்பெண் தேவை. தங்கவேண்டிய அவசியம் இல்லை.**

தொடர்புகளுக்கு:- **077 030 4848**

(CS/30722) J-1

## வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய 50 வயதிற்கு மேற்பட்ட ஆண் வேலையாட்கள் தேவை. பில் கணக்கு எழுதக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.

சம்பளம் :- 70,000/-

தொடர்புகளுக்கு:- **077 480 3379**

## அழகு நிலைய (பியூட்டி பார்லர்) உதவியாளர்கள் தேவை (பெண்கள்)

**கொக்குவில், தட்டாதெரு ஆகிய இடங்களில் உள்ள அழகுக்கலை நிலையங்களுக்கு அனுபவமுள்ள அழகுக்கலை உதவியாளர்கள் தேவை.**

தொடர்பு:- **077 885 4905**

(CS/30121) J-1

## காணி உடனடி விற்பனைக்கு

**யாழ் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் 1 1/4 பரப்பு சுற்று மதில், கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. வீடு விடுதி கட்டுவதற்கு உகந்தது.**

தொடர்பு: **077 723 5740**

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு House Keepers மற்றும் உணவு பரிமாறுபவர்கள் (Waiters) தேவைப்படுகிறார்கள்.

நேரில் வரவும். சம்பளம் 45000 - 60000

தொடர்புகளுக்கு:-

**077 240 2093, 077 373 4109**

(CS/30724) J-1


## ஈஸ்டர்...

இடம்பெற்று வருகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுர தலைமையிலான அணியினர், ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வழங்கப்படும் என்றும், ஈஸ்டர் தாக்குதல் சூத்திர தாரி கைது செய்யப்படுவார் எனவும் கூறியே ஆட்சியைக் கைப்பற்றினார்கள். ஆனால், இன்றுவரை பிரதான குற்றவாளி கைது செய்யப்படவில்லை. ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களை இந்த அரசாங்கம் நம்ப வைத்து ஏமாற்றியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி கைது செய்யப்படுவார் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்தார். இது தொடர்பில் கத் தோலிக்க திருச்சபை யின் இலங்கைக்கான தலைவர் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் வாக்குறுதி வழங்கப்பட்டது. எனினும், அரசாங்கத்தின் அனைத்து வாக்குறுதிகளும் பொய்யாகிப் போயின - என்றார். (அ-ம-44)


# காணிகள் தேவை

**"ஜெயம் றியல் எஸ்டேட்" நிறுவனத்திற்கு உடனடியாக காணிகள் தேவை.**

- கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், நீர்வேலி, ராசபாதை வீதி, நிலாவரை, புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், ஊரெழு, மானிப்பாய், தெல்லிப்பளை போன்ற இடங்களில் 2 பரப்புக்கு மேற்பட்ட காணிகளும், அத்துடன் அமைந்த வீடுகளும் விற்பனைக்கு இருந்தால் உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.
- ஆவணங்கள் அனைத்தும் சட்டத்தரணி மூலம் சரி பார்க்கப்பட்ட பின்னர் விலை கொடுத்து வாங்கப்படும்.
- தரகு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட காணிகளின் உரிமையாளர்களோ, சமூக வலைத் தளங்கள் மூலம் விளம்பரங்கள் செய்யப்பட்ட காணிகளின் உரிமையாளர்களோ தொடர்பு கொள்ள வேண்டாம்.
- "ஜெயம் றியல் எஸ்டேட்" நிறுவனம் காணிகள், வீடுகளை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் நிறுவனம் ஆகும். எனவே காணிகள், வீடுகள் விற்பனைக்கு இருப்பின் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**

**ஜெயம்**

சதீஸ் - **077 986 5457**

ஜெயம் - **077 805 1655**

## வேலையாட்கள் தேவை

**யாழ் நகரில் இராசாவின் தோட்டத்தில் அமைந்துள்ள வீட்டில் வேலை செய்வதற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.**

- பணிப்பெண்
- வாகன சாரதி (Auto, Car)

தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:-

**077 501 0821, 077 249 6443**

(CS/59915) J-1

## காணி உடன் விற்பனைக்குண்டு

**பலாலி வீதி, கோண்டாவில் டிப்போவிற்கு அருகில் உள்ள VIP திருமண மண்டபத்திற்கு பக்கத்தில் உள்ள 7 பரப்புக் காணி சிறு துண்டுகளாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.**

**T.P: 075 945 3391**

(CS 30714) A

## பெண் பணியாளர்கள் தேவை

**எமது முதியோர் இல்லத்தில் தங்கி நின்று பணியாற்ற பெண் பணியாளர்கள் தேவை.**

தொடர்புகளுக்கு:- **077 564 4303**

(CS/59907) J-1

## வீடு காணி குத்தகைக்கு - கைதடி

**கைதடி சந்தியில் A9 வீதியில் வீட்டுடன் கூடிய 68 பேர்ச்சஸ் நிலம் குத்தகைக்கு உண்டு. இந்த சொத்து வணிகப் பகுதியில் அமைந்துள்ளது. ஹோட்டல் உணவகங்கள் அல்லது இதுபோன்ற வணிகங்களுக்கு ஏற்றது.**

தொடர்பு : **072 375 9810**

## 2 வீடுகள் வாடகைக்கு உண்டு

**யாழ் நல்லூர் கோயிலிலிருந்து 500m தூரத்தில் நவீன வசதி கொண்ட, வாகனத்தரிப்பிட வசதியுள்ள வீடொன்றும் (மாத வாடகை 70 000), யாழ் இந்து மகளிர் கல்லூரியிலிருந்து 400m தூரத்தில் வீடு ஒன்றும் (மாத வாடகை 40 000) வாடகைக்கு உள்ளது. மற்றும் 5 பரப்பு நிலம் கஸ்தூரியார் வீதியில் வாடகைக்கு உள்ளது.**

தொடர்புகளுக்கு:

**077 3068 993 / 077 401 6079**

## ஆண் வேலையாள் தேவை

**யாழ் நகரில் உள்ள செல்லப் பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிட்கு ஆண் வேலையாள் தேவை**

சம்பளம் - 60000/=

தொடர்பு: **077 937 0000**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

தொடர்புகளுக்கு :

**075 498 5400, 077 937 0000**

**021 221 7600**




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

நான்குநாளாய் நாறிப்போய் நல்லகுளிர் சாதனத்தில்
தான்கிடந்த சாப்பாட்டை கொண்டுவந்தாள் – நல்லாளின்
நல்லுணவை நன்குண்ட நற்கணவன் ஓடினானே
நல்வீடும் நாறியது கண்டு.

பொன்.சுகந்தன்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஐப்பசி 30 ஞாயிற்றுக்கிழமை (16.11.2025) சிகரம் :165




# தீர்வுக்கான தமிழ்க்கட்சிகளின் வழிவரைபடம் என்ன?

○ நிலாந்தன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் ஒரு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. கலாநிதி குருபரனை பணிப்பாளராகக் கொண்ட சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாணக் கற்கை நிலையத்தால் அந்த நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டது. இலங்கையில் உள்ள சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் நிதி அனுசரணையோடு நடத்தப்பட்ட அந்த நிகழ்வில் 230க்கும் குறையாதவர்கள் பங்குபற்றினார்கள். பொதுவாக அது போன்ற நிகழ்வுகளில் அவ்வளவு தொகையினர் பங்குபற்றுவது குறைவு. ஆனால் அன்று மண்டபம் நிறைந்திருந்தது.

மூன்றரை மணித்தியாலங்களுக்கு மேல் நடந்த அந்த நிகழ்வில், நான்கு அம்சங்கள் இருந்தன. முதலாவது மேற்சொன்ன சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான கற்கை நிலையத்தை அறிமுகப்படுத்துவது. இரண்டாவது, இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கைத் தீவில் இதுவரையிலும் இரண்டு சமூகங்களுக்கு இடையில் எழுதிக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களைச் சேகரிக்கும் டிஜிட்டல் தளத்தை அங்கு அறிமுகப்படுத்தியது. மூன்றாவது, மூத்த சட்டச் செயற்பாட்டாளர், சட்டத்தரணி ரட்ணவேலுடைய உரை. நான்காவது, நான்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட ஒரு நிகழ்வு.

நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய குருபரன் அங்கு கூறியதுபோல தமிழ்த் தேசியப் பரப்பில் அவ்வாறான ஒரு சட்டச் செயற்பாட்டு நிறுவனம் உருவாக்கப்படுவது என்பது முக்கியமானது. தேச நிர்மாணத்தின் ஒரு பகுதி அது. தேசத்தை நிர்மாணிக்கத் தேவையான நிறுவனங்களை உருவாக்குவது. எவ்வளவுக்கு எவ்வளவு நிறுவன உருவாக்கிகள் ஒரு சமூகத்தில் தோன்றுகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அந்த சமூகம் திரட்சியுறும்; நொதிக்கும்; கூர்ப்படையும்.

அங்கு அறிமுகப்படுத்தப்பட்ட டிஜிற்றல் ஆவணக் காப்பகத்தில் இரண்டு பகுதிகள் உண்டு. முதலாவது இனப்பிரச்சினை தொடர்பில் இதுவரை தமிழ்த் தரப்பால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளின் தொகுப்பு. இரண்டாவது பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்பவற்றோடு தொடர்புடைய வழக்கு ஏடுகளை ஆவணப்படுத்துவது.

சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான கற்கை நிலையமும் 'நூலகம்' நிறுவனமும் இணைந்து மேற்படி ஆவணங்களைச் சேகரித்து ஆவணப்படுத்தியுள்ளன. இதுவும் தேச நிர்மாணத்தில் ஒரு பகுதிதான். அந்த நிகழ்வில் நூலகம் நிறுவனத்தின் பிரதிநிதியும் உரை நிகழ்த்தினார். அது ஒரு முழுமையான தொகுப்பு இல்லை என்றும் அதில் ஈடுபாடு கொண்டவர்கள் தமது பங்களிப்பின்மூலம் அதை முழுமைப்படுத்த வேண்டும் என்றும் அங்கு கூறப்பட்டது.

1921ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரையிலுமான சுமார் 104ஆண்டு காலப்பகுதியில் தமிழ்த் தரப்பால் முன் வைக்கப்பட்ட அரசியலமைப்பு யோசனைகளும் இனப்பிரச்சினையோடு தொடர்புடைய உடன்படிக்கைகளும், ஆவணங்களும் அங்கே எண்ணிம வடிவத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. ஒரு நூற்றாண்டுக்கு மேலான காலப்பகுதிக்குரிய அந்த ஆவணங்களைத் தொகுத்துப் பார்க்கும்போது ஓர் அடிப்படைக் கேள்வி எழுகிறது. தமிழ் மக்கள் ஏன் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தமது அபிலாசைகளை அடைய முடியாமல் இருக்கிறார்கள்?

கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தமிழ்த் தலைவர்கள் சரியாகவோ பிழையாகவோ பொருத்தமாகவோ, பொருத்தம் இன்றியோ ஏதோ ஒரு தீர்வு முன்மொழிவை முன்வைத்து சிங்களத் தலைவர்களோடு பேசியிருக்கிறார்கள். ஏதோ ஓர் இணக்கத்துக்கு வந்திருக்கிறார்கள். ஆவணங்களில் கையெழுத்திட்டு இருக்கிறார்கள். அதன்மூலம், தமிழ் மக்கள் இந்தச் சிறிய தீவுக்குள் எப்பொழுதும் ஒரு தேசிய இனமாக ஏனைய இனங்களுடன் இணைந்து வாழ்வதற்குத் தயாராக இருந்திருக்கிறார்கள் என்பது அந்த ஆவணங்களைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது தோன்றுகிறது. தமிழ்த் தரப்பு தீர்வுக்குத் தயாரில்லை; அது பகல் கனவுகளை தீர்வு மேசையில் வைக்கின்றது; அந்தப் பகல் கனவுகளை அடைவதற்காக முயற்சிக்கின்றது; யதார்த்தமாகச் சிந்திப்பதில்லை; அதைவிட முக்கியமாக தமிழ்த் தரப்பு ஒன்றாக இணைந்து தீர்வு முன்மொழிவுகளை மேசையில் வைப்பதில்லை...போன்ற பல்வேறு விதமான குற்றச் சாட்டுகளுக்கும் அந்த ஆவணத் தொகுப்பில் பதில் உண்டு.

தமிழ்மக்கள் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இலங்கைத் தீவில் இணைந்து வாழும் விருப்பத்தை வெளிப்படுத்தும் விதத்தில் தீர்வு முன்மொழிவுகளை முன் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயுதப் போராட்ட காலகட்டத்திலும்கூட திம்புக் கோட்பாட்டில் தொடங்கி இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரையிலும் தமிழ்மக்கள் தீர்வு முன்மொழிவுகளை வைத்திருக்கிறார்கள். ஆனால் கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலான காலப்பகுதியில் அந்தத் தீர்வு முன்மொழிவுகளில் பெரும்பாலானவற்றை நிராகரித்தது அல்லது உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டது அல்லது வாக்குறுதிகளை முறித்துக் கொண்டது சிங்களத் தலைவர்கள்தான். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் சில யுத்த நிறுத்தங்களை முறித்ததற்காக தமிழ்த் தரப்பின் மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்படலாம். ஆனால் தமிழ்மக்கள் தீர்வுக்குத் தயாரில்லை அல்லது தமிழ் மக்கள் பேச்சுவார்த்தைகளில் விசுவாசமாக இல்லை அல்லது தமிழ் மக்கள் பகல் கனவுகளை பேச்சுவார்த்தை மேசையில் வைக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் முழுவதும் உண்மையானவை அல்ல என்பதனை அந்த ஆவணத் தொகுப்பு எடுத்துக்கூறுகிறது.

மேலும் அந்த ஆவணத் தொகுப்புக்கூடாக ஒரு விடயம் துலக்கமாக வெளித்தெரிகிறது. அந்த விடயத்தை அங்கு பேசிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரும் சுட்டிக்காட்டினார். "இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை இணங்க வைப்பதில் கணிசமான தூரத்துக்கு எடுத்துச்சென்ற ஓர் ஆவணம் இந்திய-இலங்கை உடன்படிக்கை" என்று கஜன் சொன்னார்.

இதுவரையிலுமான இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில், சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்குள் இணைக்கப்பட்ட ஒரே தீர்வு முயற்சி என்பது இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழான பதின்மூன்றாவது திருத்தம்தான். சிங்கள பௌத்த அரச கட்டமைப்பின் ஒற்றை ஆட்சி பண்பை அது உடைக்கவில்லை என்ற காரணத்தால்தான் அந்த 13ஆவது திருத்தம் அங்கே இணைக்கப்பட்டது என்றும் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டினார். அதாவது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்குள், யாப்புக்குள் இணைக்கப்பட்ட ஒரே தீர்வு முயற்சி அதுதான். ஆனால் அதுவும் கூட்டாட்சி பண்புடையது அல்ல.

இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், அந்தத் தீர்வு முயற்சி அதாவது இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு கீழான 13ஆவது திருத்தம் என்பது எத்தகைய ஓர் அரசியல் சூழலில் யாப்புக்குள் இணைக்கப்பட்டது என்பதுதான். ஒருபுறம் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம். இன்னொரு புறம் இந்தியப் பேரரசின் இராணுவ அழுத்தம். 13ஆவது திருத்தம் எனப்படுவது ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் விளைவு. அதேசமயம் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் இந்திய அமைதி காக்கும் படையின் பிரசன்னத்தின் பின்னணியில்தான் அதுவும் சாத்தியமாகியது. அதுமட்டுமல்ல அந்தத் தீர்வில் தமிழ்மக்கள் கையெழுத்திடவில்லை. இலங்கையும் இந்தியாவும்தான் கையெழுத்திட்டன.

அதாவது கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலான காலப்பகுதியில் இனப்பிரச்சினை தொடர்பில் உருவாக்கப்பட்ட தீர்வுகளில் சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்பின் யாப்புக்குள் உள்வாங்கப்பட்ட ஒரே தீர்வு அதுதான். ஆனால் அதையும் 38ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக வந்த இலங்கை அரசாங்கங்கள் அமுல்படுத்தவில்லை என்பது மட்டுமல்ல. அந்தத் தீர்வை எப்படி மேலும் தோலிருக்கச் சுளை பிடுங்கலாம் என்றுதான் சிந்தித்துச் செயற்பட்டிருக்கின்றன. அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையின் கீழ் கடந்த நான்கு தசாப்த காலத்துக்குள் உருவாக்கப்பட்ட ஒரு தீர்வு அது. ஆனால் அந்தத் தீர்வை அதாவது யாப்பின் அந்தப் பகுதியை நிறைவேற்றாமல் விடுவதற்குத்தான் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதுதான் கடந்த சுமார் நான்கு தசாப்த கால வரலாறு. கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலான காலப்பகுதியில் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினைக்காக எழுதிக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளில் இரண்டே இரண்டு உடன்படிக்கைகள்தான் ஒப்பீட்டளவில் நீண்டகாலம் நின்று நிலைத்தன.

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோ – பசுபிக் பிராந்தியமும் அநுரவின் காய்நகர்த்தலும்



## லண்டன் செல்கிறார் ரில்வின் : இந்தியாவுக்கும் செல்வார்

அ.நிக்ஸன்

மூ 2009 க்குப் பின்னரான தமிழ்த்தேசிய அரசியல் உள்ளிட்ட இலங்கைத்தீவின் ஒட்டுமொத்த செயற்பாடுகளிலும் மாறுபட்ட அணுகுமுறை ஒன்றை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா கையாளுகின்றார் என்பதை, அவருடைய சமீபத்திய காய் நகர்த்தல்கள் காண்பிக்கின்றன. அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளையும் இந்திய - சீன அரசுகளையும் கையாளும் அணுகுமுறையானது, தமது கட்சிக் கொள்கைக்கு ஏற்பவும், சர்வதேச அரசியல் - வர்த்தகம் ஆகியவற்றைப் பேணக்கூடிய முறையிலும் அமைந்துள்ளது.

இது ஒருவகையில் சர்வதேச இரட்டைக் கொள்கை என்று கூறினாலும், இந்தியா - அமெரிக்கா - பிரித்தானிய அரசுகளின் ஒத்துழைப்பும் - உதவிகளும் அவசியம் என்ற கோணத்தில், அநுர காய்நகர்த்துகிறார் எனலாம்.

ஜே.வி.பி.யாக அல்லாமல் தேசிய மக்கள் சக்தியாகப் பயணிக்க வேண்டும் என்ற அநுரவின் சற்று மாறுபட்ட கொள்கைக்கு ஜே.பி.வி.யின் அடிப்படைக் கொள்கைகளை அப்படியே தொடர்ந்து பின்பற்றும் ரில்வின் சில்வா ஒத்துழைப்பதாக இல்லை. ஜே.பி.வி.யின் தேசிய சபை உறுப்பினர்களில் பலரும் ரில்வின் சில்வாவுடன் இணைந்திருக்கின்றனர். இந்தப் பின்னணியில்தான் 2025 ஆம் ஆண்டு அநுர கையாண்ட சில நுட்பமான அணுகுமுறை காரணமாக ரில்வின் சில்வா அதனை ஏற்கவேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக ஜே.வி.பி.யின் ஆரம்பகால எதிர்ப்புகளும், இந்தியாவின் விரிவுவாதக் கொள்கைகள் மீதான அதன் கடுமையான விமர்சனங்களும் இருந்தன. இருப்பினும், 2025 இல் ஜே.வி.பி. அதன் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, இந்திய அரசாங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தது. அநுரகுமார இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார்.

2025 ஜனவரியில், ஜே.வி.பி. யின் தலைவர்கள் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களைச் சந்தித்தனர். இது அநுரவின் அரசியல் அணுகுமுறையில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம். இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களைச் சந்தித்து உரையாடிய பின்னர், இந்தோ - பசுபிக் பிராந்திய விவகாரம் உள்ளிட்ட பல விடயங்களில் இந்திய மத்திய அரசுடன் ஒத்துழைக்க முடிவு செய்தனர். ஆட்சியைக் கைப்பற்ற முன்னரே, 2024 ஆம் ஆண்டு முற்பகுதியில் இந்த நிலைப்பாட்டை ஜே.பி.வி. குறிப்பாக அநுரகுமார கையில் எடுத்திருக்கிறார்.

இந்தியாவுடனான உறவில் 2026 ஆம் ஆண்டு மேலும் சாத்தியங்கள் அதாவது எதிர்காலத்தில் இந்தியாவுக்கும் ஜே.வி.பி. க்கும் இடையிலான உறவுகளில் புதிய வகிபாகத்தை உருவாக்கக்கூடும். அதேவேளை, தேசிய மக்கள் சக்தியாக அரசாங்கத்தை அமைத்திருந்தாலும், அநுர தலைமையிலான அரசாங்கத்தின் பிரதான வகிபாகம், ஜே.வி.பி. எனப்படும் சோசலிச - இடதுசாரித் தன்மை கொண்ட கட்சிக்குரியது என்பதை அநுர 2025 இல் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி வருகின்றார். இதன் காரண - காரியம் என்பது ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் அவர் தலைமையிலான தேசிய சபை உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து தனது நிலைப்பாட்டை ஆதரிக்கவேண்டும் என்ற சிந்தனையே எனக் கூறலாம்.

இதனை மையமாகக் கொண்டு சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் (Communist Party of China - CPC) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை அநுர சென்ற ஒக்ரோபர் மாதம் கைச்சாத்திட்டிருக்கிறார். ஜே.வி.பி.யின் தேசிய சபை உறுப்பினரான, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க சீனாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் உரையாடிய பின்னர் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அநுர, ரில்வின் சில்வா ஆகியோர் சீனாவுக்கு பயணம் செய்து நடத்திய பேச்சுகளின் தொடர்ச்சியாகவே பிமல் ரத்நாயக்க சீனாவுக்குச் சென்று இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசத் துறைத் தலைவர் லியு ஹைக்சிங் (Liu Haixing) உள்ளிட்ட பிரதிநிதிகளுடன் உரையாடிய அமைச்சர் ரத்நாயக்க, தமது அரசாங்கத்தின் அரசியல் - பொருளாதாரச் செயற்திட்டங்கள் பற்றி விளக்கி கூறியிருக்கிறார். முற்போக்கான சீர்திருத்தங்கள் மூலம் சீனாவை எப்படி சீன கம்யூனிஸ்ட் கட்சி கட்டி வளர்த்ததோ, அதேபோன்று ஒரு செயற்றிறன் மிக்க நடவடிக்கைகள் ஊடாக இலங்கையைக் கட்டியெழுப்பவேண்டும் என பிமல் ரத்நாயக்க சீனாவில் விபரித்திருக்கின்றார்.

ரணில், மஹிந்தவைப் பின்பற்றி ஜே.வி.பி. யும் சீனாவுடன் அந்த உறவைப் பேணுவதற்கு ஏற்ப புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது எனக் கூற முடியாது. ஏனெனில் இந்த ஒப்பந்தம் கட்சி அரசியல் மாத்திரமல்ல புவிசார் அரசியல் - பொருளாதார நலன்கள் என்ற பிரதான அம்சங்களையும் கொண்டுள்ளது. ஆகவே 2025 இல் அநுர கையாண்ட அணுகுமுறை என்பது ரணில், மஹிந்த போன்ற தலைவர்களைவிடவும், முற்றிலும் மாறுபட்டது. அதாவது புவிசார் அரசியல் விவகாரங்களில் சமாளிப்பு அரசியல் என்பதைவிடவும், இதுதான் ஜே.வி.பி. என்பதையும், அதன் அடிப்படைக் கொள்கைகளையும் சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்தும் உத்திதான் இது. குறிப்பாக வோஷிங்டன் - புதுடில்லி அநுர அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வரும் பின்னணியில், சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஜே.வி.பி. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்மை முற்றிலும் மாறுபட்ட உத்தி.

ஆகவே அநுர அரசாங்கம் பதவியேற்று ஒரு வருடம் சென்றுள்ள நிலையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதான வகிபாகம் ஜே.வி.பி. என்பதை நிரூபித்துள்ளது என்று கூறலாம். இப் பின்புலத்தில் கொழும்பில் உள்ள இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் என்ரூ பெட்ரிக், ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

சென்ற வெள்ளிக்கிழமை, கொழும்பு பத்தரமுல்ல பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி. யின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில், அநுர அரசாங்கத்தின் செயற்பாடுகள் - பிராந்திய பாதுகாப்பு விடயங்கள் பற்றி உரையாடப்பட்டுள்ளது. குறிப்பாக பிரித்தானிய - இலங்கை இராஜதந்திர உறவு, அதுவும் நீண்டகால நட்புறவு பற்றி பேசப்பட்டது. அத்துடன், இலங்கைக்கு, பிரித்தானிய அரசு எப்போதும் ஒத்துழைப்பு வழங்கும் என்று உயர்ஸ்தானிகர் என்ரூ பெட்ரிக் சந்திப்பில் உறுதியளித்துள்ளார்.

அதேவேளை, அநுர அரசாங்கத்தின் எதிர்காலச் செயற்பாடு மற்றும் மேற்கு - ஐரோப்பிய நாடுகளுடன் ஒத்துழைத்துச் செயற்படுவது பற்றி பிரித்தானிய அரசுடன் விரிவாக உரையாட, ரில்வின் சில்வா எதிர்வரும் 21 ஆம் திகதி தலைநகர் லண்டனுக்குச் செல்லவுள்ளார். இதற்கான அழைப்பை உயர்ஸ்தானிகர் என்ரூ பெட்ரிக் ரில்வின் சில்வாவிடம் நேரடியாகக் கையளித்துள்ளார். ஜே.வி.பி. யை மையப்படுத்திய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், சீனாவுடன் கூடுதல் உறவைப் பேணும் என பலராலும் எதிர்வுகூறப்பட்ட நிலையில், அமெரிக்க - இந்திய அரசுகளை மையப்படுத்தியும் பிரித்தானிய ஆதரவோடும், மேற்கு நாடுகளுடன் உறவைப் பேணும் அணுகுமுறையை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மற்றொரு பக்கத்தால் பின்பற்றி வருகிறார் என்பது கண்கூடு. ஜே.வி.பி. யின் அடிப்படைக் கொள்கையோடு செயற்பட்டு வரும் ரில்வின் சில்வா, அதற்கு ஒத்துழைக்கத் தயங்கிய ஒரு பின்னணியிலும், ரில்வின் சில்வா எதிர்காலத்தில் இந்த நாடுகளை விமர்சிக்காமல் இருக்கும் நோக்கிலும் லண்டன் பயணத்தை அநுரகுமார திஸாநாயக்கா ஏற்பாடு செய்திருக்கிறார் என்றும் கூறலாம். அதேநேரம் ரில்வின் சில்வா, இந்தியாவுக்கும் பயணம் செய்யவுள்ளார்.

ஆகவே அநுரகுமார திஸாநாயக்க தனியே இலங்கையின் ஜனாதிபதியாக அல்லாமல், இந்தோ - பசுபிக் பிராந்திய பாதுகாப்பு விடயங்களில் முன்னுக்குப் பின் முரணான அணுகுமுறை ஒன்றை கையாண்டு, இலங்கைத்தீவின் இறைமை என்ற விவகாரத்தில் மேற்கு - ஐரோப்பிய நாடுகள் மற்றும் சீன - இந்திய அரசுகள் போன்றவற்றை மிக நுட்பமாகக் கையாளுகிறார். இலங்கையின் தேசியத் தலைமை என்ற அங்கீகாரத்தை நோக்கி அவர் பயணிக்கிறார். ஆனால், ஈழத்தமிழர் விவகாரம் முற்றிலும் உள்ளக விவகாரம் என்ற ஜேவி.பி.யின் கருத்தியலை மேற்கு - ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவும் ஏற்றுக்கொண்டுள்ளன என்பதை இந்த ஆண்டு அநுர நிரூபித்துள்ளார்.

அத்துடன் மனித உரிமை மீறல் பிரச்சினைகள் - போதைப் பொருள் பிரச்சினைகள் மற்றும் ஊழல் அதிகாரத் துஷ்பிரயோகம் என்ற விவகாரங்கள் எல்லாமே கடந்த 76 வருட ஆட்சியில் பழம் பெரும் கட்சிகள் விட்ட தவறு என்றும், 2026 ஆம் ஆண்டு முற்றாக ஒழிக்கப்பட்டு விடும் என்ற வாக்குறுதிகளையும் அநுர சர்வதேசத்துக்கு வழங்கியியுள்ளார். குறிப்பாக நிதி வழங்கும் சர்வதேச நாணயநிதியம், உலக வங்கி போன்ற பொது நிறுவனங்களுக்கு அந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், ரணில், மஹிந்த. கோத்தாபய ஆகிய தலைவர்கள் வடக்கு கிழக்கில் தங்கள் தமிழ் முகவர்களை பயன்படுத்தி, தமிழ்த் தேசிய அரசியல் சிந்தனைகளை மடைமாற்ற முற்பட்டு தோல்வி கண்ட அணுகுமுறையில் இருந்து ஜே.வி.பி. மாறுபட்ட உத்தி ஒன்றைக் கையாள்வதை தமிழ்த்தரப்பு அறியாமல் இருப்பதும் வேடிக்கை. குறிப்பாக வடக்கு =கிழக்கில் மக்கள் மத்தியில் செல்வாக்குள்ள தமிழர்களை வேட்பாளர்களாக ஜே.வி.பி. கண்டறிந்துள்ளது. 2024 ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் அனுபவங்களின் பிரகாரம், வரவுள்ள மாகாண சபைத் தேர்தலில் செல்வாக்குள்ள தமிழர்கள் பலரை போட்டியிட வைப்பதற்கான ஏற்பாடுகள் இப்போதிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முன்கூட்டிய மதிப்பீடுகள் - தயாரிப்புகளை ஜே.வி.பி. மிக நுட்பமாகக் கையாளும் திறன் கொண்டது.

இந்தப் பின்னணியில் முன்னாள் நீதியரசர் இளஞ்செழியன் உள்வாங்கப்பட்டிருக்கிறாரா என்ற சந்தேகம் எழுகின்றது. ஆனால் தமிழ்த்தேசியக் கட்சிகள் எதனையும் அறியாமல் இருக்கின்றன. புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் அது பற்றி புரிந்து கொண்டதாக இல்லை. சில புலம்பெயர் தமிழ் அமைப்புகள் ஜே.வி.பி. யின் காய்நகர்த்தல்களை நன்கு தெரிந்து செயற்படுகின்றன என்றும் கூலாம். அதில் உண்மை இல்லாமலில்லை. ஆகவே அமெரிக்க -இந்திய அரசுகள் மற்றும் சீனா போன்ற நாடுகளை கையாளும் ஜே.வி.பி.யின் அணுகுமுறை என்பது இலங்கைத் தேசியம் என்ற ஒற்றைக் கொள்கைக்கும், ஜே.வி.பி. யின் அடிப்படைக் கொள்கைக்கும் வலுவூட்டப்படுகின்ற அநுரவின் நுட்பமான காய்நகர்த்தல் என்றால் அது மிகையாகாது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி

விசும்பின் துளி வீழின் அல்லால்...

## உலகக் கழிப்பறை நாள்
## நவம்பர் 19, 2025

எமக்கு எப்போதும் கழிப்பறை தேவை

**ஏன்?**

- சுகாதாரத் தேவை
- நோய்த்தடுப்பு
- சுற்றுப்புறப் பாதுகாப்பு

**எவ்வாறான?**

- அனைவருக்குமான அணுகல்
- காலநிலை மாறுதல்களை தாங்கக்கூடிய
- பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றம் குறைவான
- வலுவான அமைப்புகளின் நிலைத்த ஆதரவு, முதலீடு

| | |
|---|---|
| பாதுகாப்பற்ற சுகாதார சேவைகளை எதிர்கொள்வோர் | 3.4 பில்லியன் மக்கள் |
| திறந்த வெளியில் மலம் கழிப்போர் | 354 மில்லியன் மக்கள் |
| பாதுகாப்பற்ற நீர், சுகாதாரம் காரணமாக | தினமும் 1000 குழந்தைகள் (வயது >5) இறப்பு |
| 2030 இல் பாதுகாப்பற்ற கழிப்பறைகள் கொண்டோர் | 3 பில்லியன் மக்கள் |

தெரியுமா?

தரவு மூலம்
ஐக்கிய நாடுகள் சபை

## இளையோர் பார்வை

### மாற்றம் வேண்டாமா?

மரங்களை வெட்டி மதிகெட்டு நடப்பதேன்?
குப்பைகளைக் கொட்டி குற்றம் புரிவதேன்?

இயற்கைக்கு அநீதி புரிவதேன்?
எம் தேசத்தை நாளும் அசுத்தப்படுத்துவதேன்?

நெகிழிகளால் நாசமாக்கி பின் நியாயப்படுத்துவதேன்?
நீதியை உணராமல் பொறுப்பின்றி நடப்பதேன்?

இயற்கை வளங்களை அழிப்பதேன்?
எதிலும் அநீதி புரிவதேன்?

எம் உலகின் அழகினைக் கெடுப்பதேன்?
இவற்றுக்குப் பதில் என்னவோ?

மாறாத மாற்றம் மனங்களில் வேண்டாமா?

**சி. தர்ஷிகா, தாவடி.**

# புலமையாளர் பதில்



**கேள்வி:** கடந்து சென்ற கோடை காலத்தின் இறுதியில் சிறிய, பெரிய குளங்களை தூர்வாருதல் செய்வதில் புதியதோர் அக்கறை எமது சமூகத்தில் தென்பட்டது. இவ் விடயத்தில் குளங்களின் நீர் வளம் பாதிப்படையாதவகையிலும், பொறுப்புடைமையின் அடிப்படையில் அவ்வப் பகுதி மக்களையும் இணைத்துக் கொண்டும் தூர்வாருதலை மேற்கொள்வது சாத்தியமானதா? இவ்வாறான முயற்சிகளைத் தென்மராட்சிப் பகுதியில் மேற்கொண்டுவரும் ஒருவர் என்ற வகையில் சராசரிக் குளங்களைத் தூர்வாருதல் செய்ய முற்படும் ஒருவரோ அல்லது குழுவினரோ எங்கெல்லாம் அவதானமாக இருக்க வேண்டுமென நீங்கள் நினைக்கிறீர்கள்? அவர்கட்கு என்ன அறிவுரை சொல்லுவீர்கள்?

(S.மதிவதனி, இணுவில்)

**பதில்:** கடந்த கோடை காலத்தின் இறுதியில், சிறிய மற்றும் பெரிய குளங்களைத் தூர்வாருதலில் அக்கறை எமது சமூகத்தில் தென்பட்டது என்பது உண்மையே. அது பல்வேறான இடங்களிலும் முன்னெடுக்கப்பட்டது. நிலத்தடி நீர்ப்பற்றாக்குறை, நிலமேல் நீர்மாசடைதல் போன்றன தீவிரமடைந்து வரும் இக்காலத்தில், இத்தகைய நடவடிக்கைகள் மிகவும் அவசியமானவையாகும்.

பல குளங்கள், பராமரிப்பு இல்லாமை, ஆக்கிரமிக்கப்படுதல், குப்பை கொட்டுதல், சட்டவிரோத மணல் எடுத்தல் போன்ற ஏராளமான காரணங்களினால் அவற்றின் இயற்கை வடிவத்தையும், பயன்பாட்டையும் இழந்துவிட்டன. இதனால் நீர்த் தட்டுப்பாடு, மண் உலர்ச்சி மற்றும் பசுமை சிதைவு போன்ற பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன. இந்தப் பின்னணியில், குளங்களைத் தூர்வாருதல் மற்றும் மீள்புதுப்பித்தல் முயற்சிகள் சமூக நலனுக்கு மிக அவசியமானவையாக மாறியுள்ளன.

ஆனால், தூர்வாருதல் என்பது வெறும் தொழில்நுட்ப நடவடிக்கையாக மட்டும் கணிக்கப்படாமல், சமூகப் பொறுப்பும் சுற்றுச்சூழல் சிந்தனையும் ஒருங்கிணைந்த செயற்பாடாகவும் இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. நீர் வளத்தை நிலைபேறான தன்மையுடன் பாதுகாக்கும் நோக்குடன், குளங்களைச் சீரமைத்தல் மட்டுமே நீண்டகால நன்மைகளை வழங்கும்.

தூர்வாருதலை மேற்கொள்ளும்போது, அவை திட்டமிட்ட முறையில் செயற்படுத்தப் பட வேண்டும். ஒருவரின் தனிப்பட்ட முயற்சியாக அல்லாது, பொது பங்குபெறுதலுடன் கூடிய செயற்பாடாக அமைதல் வேண்டும். அதற்காக அந்தப்பகுதி மக்களும், விவசாயிகளும், சமூக நிலையங்களும், இளைஞர் குழுக்களும், உள்ளூராட்சி மன்றங்களும் அரச நிறுவனங்களும் இணைந்து செயற்படுவது சிறந்தது. இதனால் தூர்வாருதல் பணிகளின் வெளிப்படைத்தன்மையும், பொறுப்புடைமையும் உறுதி செய்யப்படுவதாக அமையும். அவ் அனுபவமூலம் பெறப்பட்ட அறிவும்கூட குறிப்பிட்ட சமூகத்தினால் உள்வாங்கப்பட்டு பேணப்படும். அடுத்தடுத்த தலைமுறைகளும்கூட பயன்பெறும் அல்லவா?

இவ்வாறான வகையில் , தூர்வார முற்படுவோர் சில முக்கியமான அம்சங்களில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். தூர்வாருவதற்கு முன் சுற்றுச்சூழல் மற்றும் நீரியல் நிபுணர்களின் ஆலோசனை பெறுவது அவசியம். குளத்தின் இயற்கை வடிவமைப்பை மாற்றுவது தவிர்க்கப்படுதல் வேண்டும். நீர் நுழைவு மற்றும் வெளியேற்ற பாதைகள் பராமரிக்கப்படவேண்டும். இவ்வாறான தொழில்நுட்ப அடிப்படையிலான நடவடிக்கைகள் நீர் வளத்தின் நீடித்த பாதுகாப்பை உறுதி செய்வதாக அமையும்.

முதலில், அளவு மீறியவகையில் தூர்வாருதல் தவிர்க்கப்பட வேண்டும். மிக ஆழமாகத் தோண்டுவது சரியெனத் தெரிந்தாலும், பல சமயங்களில் இவ் வேலையின்போது குளத்தின் அடியில் இயல்பாக இருக்கக்கூடிய நீர் உட்புகா படை சேதமடைய வாய்ப்புண்டு. அவ்வாறு சேதமடைந்தால் நீரானது சேமிக்கமுடியாது போகலாம். நிலத்தின் கீழுள்ள சுண்ணாம்புக் கற்கள் சேதப்படுத்தப்படும்போதும் இவ்வாறான நிலை ஏற்படும். இரண்டாவதாக, தூர்வாரிய வண்டல் மண் மற்றும் கழிவுகளைச் சரியான முறையில் அகற்றுதல் அவசியம். வண்டல் விவசாய நிலங்களுக்கு வளமாக பயன்படுத்தப்படலாம். அணைக்கட்டுக்குப் பயன்படுத்தியது போக மேலதிக மண்ணை அப்பகுதி தாழ்நில வெள்ள அபாயங்களைத் தவிர்க்கப் பயன்படுத்தமுடியும் . மூன்றாவது, மழைக்காலம் தொடங்குவதற்கு முன் பணிகளை முடிப்பது முக்கியம், இதனால் மழைநீர் முழுமையாக சேமிக்கப்படும்.

மேலும், இத்தகைய பணிகளில் சமூக பங்கேற்பு மிக முக்கியம். மக்கள் தங்கள் குளங்களைப் பராமரிப்பது ஒரு பொறுப்பாகக் கருதி, காலத்திற்குக் காலம் சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால், நீர்ப் பற்றாக்குறை குறைந்து, நிலத்தடி நீர் வளம், விவசாய உற்பத்தி போன்றன உயரும். குளங்களைத் தூர்வாருதல் என்பது வெறும் நீர் சேமிப்பு நடவடிக்கை அல்ல. அது சமூக ஒற்றுமை, சுற்றுச்சூழல் உணர்வு, மற்றும் தலைமுறைகளுக்கான நிலைத்த நீர் வளத்தை உருவாக்கும் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகும். ஆகவே, குளங்களைத் தூர்வாருதல் என்பது இயற்கையுடனும் மனிதனுடனும் ஒருங்கிணைந்த ஒரு நிலைபேறான வாழ்க்கை முறையின் அடையாளமாகக் கருதப்படவேண்டும்.

**ந.சஞ்சேயன்,**
வடக்கின் இளம் நீர்வாண்மையாளர் வட்டம்

### கடந்த மாத அமர்வு

# கந்தரோடையில் தூர்வாரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் WASPAR செயற்றிட்டத்தின் ஒரு அம்சமாக வடக்கின் இளம் நீர் வாண்மையாளர் வட்டத்தின் குழுவினர் அண்மையில் "குளம் தூர்வாரல்" பணிகள் நிகழ்ந்த கந்தரோடைக் குளத்தினைப் பார்வையிட்டனர்.

'தூர்வாரல்' நடவடிக்கைகளின் போது சிறிய குளம், பெரியகுளம் என்ற வேறுபாடின்றி, குளத்துக்கும், அதை அண்டிய ஊரவர் சமூகம், அதைச் சூழ்ந்துள்ள இயற்கையின் கூறுகள், இவை எல்லாம் பின்னிப் பிணைந்துள்ள தொடர்பினை இயன்ற அளவு புரிந்து கொள்வதால் வரும் ஒத்துணர்வோடு, ஊர் மக்களையும் உள்வாங்கி இடம்பெறுவதே நிலைபேறான நீர் முகாமைத்துவமாக அமையும் என்பது WASPAR செயற்றிட்டத்தின் அடிப்படையான நிலைப்பாடு. சில ஆண்டுகளாக இதனை பல வட்டங்களில் நாம் பேசியும் வருகிறோம்.

கந்தரோடைக்குளம் வழுக்கி ஆற்று நீரேந்து பகுதியின் மிகப்பெரிய குளம் என்பதோடு, அது தொடர்படு அருவியின் (Cascade) கூறு என்பதனால் தனது அமைவிடத்துக்கு மேலும் கீழுமாக உள்ள மற்றைய குளங்கள், நீரோடைகளுடனும் அது தொடர்புபட்டது. எனவேதான் இக் குளத்தில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயற்பாடும் வழுக்கியாற்றின் வழித்தடம் எங்கும் மாற்றங்களை ஏற்படுத்த வல்லது என்பதை WARPAR இன் நடப்பு ஆய்வுகள் பறைசாற்றி வந்துள்ளன.

வண்டல் மண்ணை அப்புறப்படுத்துவதற்குக் கிடைத்த அனுமதியின் படி மாரிகாலம் தொடங்குவதற்கு முன்னர் மண்ணை வெட்டி அகற்றியாகவேண்டும் என்ற அவசரத்தில், பிரதேச செயலகம் அனுமதித்த 100 உழவு இயந்திரப்பெட்டி மண் அங்கும் இங்குமாக அகழ்ந்தெடுத்துச் செல்லப்பட்டதனை எமது அவதானிப்புகள் வெளிப்படுத்தின. அதனாலோ என்னவோ ஒன்றுக்கொன்று தொடர்புடைய வேறு பல விடயங்களைக் கருத்தில் எடுக்காமலும், மேற்கூறிய தொடர்புகளை உள்ளடக்கிய ஒரு பரந்த திட்டமிடலற்ற முறையில், மண் அகற்றல் மட்டும் என்ற ஒருதலைப்பட்சமான, முழுமை பெறாத செயலாக, இது நடந்து முடிந்தது ஏமாற்றமே.

உதாரணமாக, குளத்தின் நடுவில் அமைந்துள்ள மண் திட்டி ஒன்றில் நிற்கும் பழமைவாய்ந்த மருத மரத்தினைப் பாதிக்கக்கூடிய அளவு நெருக்கமாக, செங்குத்தான வகையில் வெட்டி மண் அகற்றப்பட்டு



இருந்தது பற்றி பிரதேசவாசிகள் விசனப்பட்டுக் கொண்டனர். அவசர அணுகுமுறைகளில், போதிய கண்காணிப்பு இன்றிக் களமிறங்கும் இயந்திரங்களின் பாவனையாளர் இயற்கையைப் புரிந்துகொள்வதில் தவறிவிடுகின்றனர்.

எமது கள ஆய்வின் தொடர்ச்சியாக, யாழ். மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளை இணைத்த இளம் நீர் வாண்மையாளர் வட்டத்தின் கலந்துரையாடல் மேற்படி கள ஆய்வின் அவதானிப்புகளையும், அரச நிர்வாக கட்டமைப்பின் புரிதல்களையும் உள்ளடக்கியது. பல்வேறு கோணங்களில் எம்மிடையே அலசப்பட்ட தலைப்புகளுள் உரிய அரசுசார் அனுமதிகளைப் பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள், நேரவிரயம் உள்ளிட்ட சவால்களும், நிச்சயமாகக் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய சமூகம், சூழல் சார்ந்த, பல விடயங்களைப் பாதிக்கவல்ல அணுகுமுறைகளின் அவசியமும் அடங்கின.

குளம் தூர்வாரலின்போது அகற்றப்படும் "தூர்" எனும் பெறுமதிமிக்க வண்டல் மண், சூழவுள்ள வயல் நிலத்தில் உரமாகிப் பயன் தருவதற்குப் பதிலாக, வேறு பிரதேசங்களில் நீர் தேங்கி நிற்கும் தாழ்வான பகுதிகளை நிரப்புவற்காக அனுப்பப்படுவது கூட ஒரு நவீன முரண்நகை அல்லவா? இருப்பினும், கந்தரோடைக் குளத்தின் முன்னெடுப்பு மூலம் கற்றறிந்த இதுபோன்ற பாடங்களைக் கொண்டு, எதிர்வரும் காலங்களில் பூரண திட்டமிடலுடன் தூர்வாரலை முன்னெடுக்க அனைவரும் இணைந்து உதவுவது என்ற கருத்து எம்மால் பொதுவாக ஏற்கப்பட்டது.

*எதிர்வரும் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி துளியின் 20 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடிவரும். வடமாகாணத்து நீர்வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:* **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemiology, Faculty of Medicine, University of Jaffna;** *மின்னஞ்சல்:* **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிக்கான கலங்கரைவிளக்கமும் ஒரு தீர்ப்பும்



வரலாற்றையே புரட்டிப்போடுமளவுக்கு நீதிமன்றத் தீர்ப்புகள் பலமிக்கவை. அதே போன்று சில தீர்ப்பு களே வரலாறாகவும் மாறிவிடுவதுண்டு. இன்னும் சில தீர்ப்புகள் வரலாற்றுத் திருப்புமுனைக் கான வழிகாட்டிகளாகவும் அமைகின்றன. தீர்ப்புகள் என்பவை தனியே அந்த வழக்கோடு முடிந்துவிடுவதில்லை. ஒரு வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு, பின்னர் 'முற்தீர்ப்பு' என்ற அடிப்படையில் சட்டமாகவும் கொள்ளப்படுகின்றது. எனவே ஏதோ ஒரு வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டு, அதே போன்ற வேறொரு வழக்கில் நீதியைப் பெறமுடிகின்றது. இந்த வகையில் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஜே.பி.ஏ. ரஞ்சித்குமார், இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி வழங்கிய தீர்ப்பு, மனிதப்புதைகுழிகள் அகழ்வு தொடர்பில் வரலாற்றுக் கட்டுடைப்பொன்றை நிகழ்த்தியிருக்கிறது. மனிதப்புதைகுழிகளின் தேசமாக, தமிழர் தாயகம் மாறி நிற்கும் வேளையில், காணாமல் ஆக்கப்பட்டோரின் கதி தெரியாமல் அவர்களின் உறவுகள் கலங்கி நிற்கும் வேளையில், நீதிக்கான கலங்கரை விளக்கம் போல அமைந்த களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றம், 'குருக்கள்மடம்' மனிதப்புதைகுழி தொடர்பில் வழங்கியிருக்கும் அந்தத் தீர்ப்பை நீதிக்காகப் போராடும் இனமொன்று அறிந்து வைத்திருப்பது காலக்கட்டாயம். எனவே அந்த அவசியம் கருதி குறித்த தீர்ப்பின் முழுவடிவமும் இங்கு தொடராகப் பிரசுரமாகின்றது. (ஆ-ர்)



2

14. 21.07.2025ஆம் திகதி இவ்வழக்கு திறந்த நீதிமன்றில் அழைக்கப்பட்ட போது காணாமற்போனோர் அலுவலகம் சார்பில் தோன்றிய கற்றறிந்த சட்டத்தரணி அவர்கள் இவ்வழக்கைக் கொண்டு நடத்துவது தொடர்பில் காணாமற்போனோர் காரியாலயத்தின் தலைவரால் 2019.10.10ஆம் திகதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நிலைப்பாட்டிலேயே தமது காரியாலயம் தொடர்ந்து இருப்பதாகத் தெரிவித்திருந்தார். அதே வேளை, கௌரவ சட்டமா அதிபர் சார்பில் எவரும் தோன்றி நிலைப்பாடுகளைத் தெரிவித்திருக்கவில்லை.

15. ஆதலினால், இன்றைய தினத்திற்கு இந்த வழக்கினை கட்டளைக்கு நியமித்தும், கௌரவ சட்டமா அதிபருக்கு இவ்வழக்கு தவணையிடப்பட்டுள்ளது பற்றி மீளவும் ஒரு அறிவித்தல் சேர்ப்பிக்கவும் கட்டளையாக்கியிருந்தது.

16. இன்றையதினம் காலையில் இந்த வழக்கு அழைக்கப்பட்டபோதும், கௌரவ சட்டமாஅதிபர் சார்பில் எவரும் தோன்றியிருக்கவில்லை.

17. இந்நிலையிலேயே, கௌரவ சட்டமா அதிபரின் 04.10.2020 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், இந்த வழக்கின் விசாரணையை மேலும் முன்னெடுக்க அவசியமில்லை' என்ற கௌரவ சட்டமா அதிபரின் அறிவித்தல் இருக்கின்ற வேளையில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கமைய, தொடர் நடவடிக்கைக்குக் கட்டளையாக்க முடியுமா? என்பது பற்றி, பின்வருமாறு இக்கட்டளையில் பரிசீலிக்கின்றது.

18. இக்கட்டளையின் பிரதான விடயப்பொருளை ஆய்வு செய்ய முன்னர், 'எமது அரசியலமைப்புக் கட்டமைப்பின் அடித்தளம் நீதித்துறைச் சுதந்திரம் ஆகும்' என்பதை வலியுறுத்துவது அவசியமாகக் காணப்படுகின்றது. நீதிமன்றத்தின் முடிவானது வெளிப்புறச்சூழலிருந்து எழக்கூடிய எல்லாவிதமான அழுத்தங்களிலிருந்தும் விடுபட்ட சுயாதீனமானதொன்று என்பதும், நீதித்துறைக் கட்டமைப்பில் மக்களுக்குள்ள நம்பிக்கையைப் பாதுகாக்கின்றதுமாக அதன் தீர்ப்பு காணப்படவேண்டும் என்பதை மனதிற்கொண்டே மன்று இக்கட்டளையை ஆக்குகின்றது.

19. 'அரசாங்கத்தின் ஏனைய துறைகளினால் நீதித்துறையின் கடமைகளில் தலையீடுசெய்வது அரசியலமைப்புக்கு முரணானதாகும்' எனவும், 'நீதித்துறை அதிகாரமானது நிர்வாகத்துறையின் முடிவுகளால் வலுக்குறைவு செய்யப்படுவனவாகவோ, இடைமறிக்கப்படுகின்றனவாகவோ இருக்கமுடியாதென வலியுறுத்தப்பட்டுள்ள முன்னைய தீர்ப்புரைகளையும் மன்று கவனத்தில் எடுத்துக்கொள்ளுகின்றது. Liyanage v. The Queen (1967) 68 NLR 265 (PC), Singarasa v. Attorney General (2006).

20. மேலும், நீதிமன்றின் கட்டளையொன்றைக் கோரியுள்ள இவ்வழக்கின் விடயமானது மக்கள் 'நீதிமன்றின்மீது வைக்கும் நம்பிக்கையின்பால்' மிகவும் தொடர்புபட்ட ஒன்றாகவுள்ளது. 'நீதித்துறையின்மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை எந்தளவுக்கு அவசியமும், முக்கியமும் பெறுகின்றது என்பதையும் நீதிமன்றம் கவனத்திற்கொள்ளுகின்றது.

21. மக்கள் நீதிமன்றத்தின் மீது வைக்கும் நம்பிக்கையிலேயே நீதிமன்றத்தின் அதிகாரம் தங்கியுள்ளதுடன், சட்டவாட்சியைச் சீராகப் பேணுவதற்கு மக்களின் நம்பிக்கையென்பது இன்றியமையாததாகும். நீதித்துறையின் நேர்மை மக்கள் கண்டுகொள்ளக்கூடியதாகவும், அதனை உணரவும், அனுபவிக்கக்கூடியதாகவும் காணப்படவேண்டும். ஏனெனில், நீதித்துறை யின் சட்டபூர்வமான பெறுமதியானது மக்கள் அதன்மீது வைத்துள்ள நம்பிக்கையிலும், உறுதியிலுமே தங்கியுள்ளதென்பதை இந்நாட்டின் உயர்நீதிமன்றம் தொடர்ச்சியாக பலதீர்ப்புக்களில் வலியுறுத்தி வந்துள்ளது. மக்களின் இந்த நம்பிக்கையை நீதியின் காவலராகவுள்ள நீதிமன்றங்கள், நீதிநிர்வாகத்தின் பக்கம் சாரா மதிப்பை உறுதிப்படுத்துவதன்மூலமாக பாதுகாக்கவேண்டிய பொறுப்பினைக் கொண்டுள்ளன.

22. இவ்வழக்கில் தொடர்புடைய குருக்கள்மடம் புதைகுழி தொடர்பான முறைப்பாட்டிலிருந்து தெரியவருகின்றதையொத்த, குடிமக்களின் உரிமைகள்மீறலுடன் தொடர்புடைய பாரதூரமான வழக்குகளில், பொதுமக்களின் நம்பிக்கையென்பது மிகவும் உடைந்துபோன சோர்விழந்த நிலையிலேயே காணப்படுகின்றது. அவ்வாறிருக்கையில், இத்தகைய வழக்கு விசாரணைகள் கைவிடப்பட்டாலோ, நியாயமின்றி காலதாமதமாகினாலோ, முறையற்ற குறுக்கு வழியில் முடிவுறுத்தப்பட்டாலோ நீதிமுறைமையின் மீதுள்ள மக்களின் நம்பிக்கை மேலும் கடுமையாக அல்லது முற்றாகப் பாதிக்கப்படக்கூடும். ஆதலினால், இத்தகைய வழக்குகளில் நீதித்துறையின் கடமைகள் எந்தவொரு வெளிப்புற அழுத்தத்துக்கு உட்படாமலும், மிகவும் உயர்நிலை சுயாதீனத்துடனும் செயற்படவேண்டியது மிகமிக இன்றியமையாதது.

23. குருக்கள்மடம் புதைகுழி விவகாரத்தில் சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களின் பாரதூரத்தன்மையும், நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கு அவை ஏற்படுத்தக்கூடிய பரந்த பாதிப்புகளையும் கவனத்திற்கொள்ளும் போது, இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தினை மிகவும் நேர்த்தியாகவும், பக்கம்சாராத் தன்மையுடனும் பரீசீலனை செய்ய வேண்டியது இந்நீதிமன்றத்திற்கு ஒப்புவிக்கப்பட்டுள்ள உயரிய கடமையாகும் என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

24. நீதித்துறையின் மீதுமுள்ள மக்களின் நம்பிக்கையினைப் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்தவாறே, இந்நீதிமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை மன்று பரிசீலிக்கின்றது.


25. இந்த வழக்கானது, காணாமல் ஆக்கப்பட்ட (enforced disappearance) நபர் ஒருவரின் உறவினரால் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பிலானதாகும். 2018ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயச் சட்டத்தின் பிரிவு 14(1)ல் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதன்படி 'காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு காணாமல் ஆக்கப்படுதலின் சூழ்நிலைகள் தொட்பான உண்மையையும், காணாமற் போக்கப்பட்ட ஆளின் கதிபற்றிய உண்மையையும் அறிந்துகொள்வதற்கான உரிமையை' இந்நாட்டின் சட்டம் அங்கீகரித்துள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உண்மைகளைக் கண்டறிவதற்கான உரிமையுடன் தொடர்புடைய சர்வதேச சமவாயத்திற்கு இலங்கையின் கடப்பாட்டை நிறைவேற்றுகின்றதன் ஒரு பகுதியாகவே இந்நாட்டின் சட்டத்தில் 'உண்மைகளைக் கண்டறிவதற்கான உரிமை (Right to seek truth) என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் முன்னுரையில் நன்கு விளம்பப்பட்டுள்ளதன்படி, சட்டவாக்குநரின் எதிர்பார்ப்புங்கூட 'உண்மையையும், நீதியையும் அடைவதற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்குமுள்ள உரிமையை' அங்கீகரிப்பதும், உறுதிப்படுத்துவதும் ஆகும்.

26. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் கௌரவம், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக, இந்த உரிமைகளுக்கு அர்த்தம் கொடுக்கும் வகையில், நீதிமன்றம் உட்பட, அரசின் எல்லா நிறுவனங்களும் செயற்படவேண்டியதன் அவசியத்தை இந்த அங்கீகாரமானது மேலும் வலியுறுத்துகின்றது.

27. இதேவேளை, மேலும், 2016ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகச் சட்டத்தின் முன்னுரையிலும் 'காணாமற்போன ஆட்களின் உறவினர்கள், அத்தகைய ஆட்கள் எச்சூழ்நிலைகளில் காணாமற்போனார்கள் என்பதையும் அத்தகைய காணாமற்போன ஆட்களின் கதியையும், அவர்கள் எங்குள்ளார்கள் என்பதையும் அறிவதற்கு உரித்துடையோராக உள்ளனராதலாலும், அத்துடன் காணாமற்போன ஆட்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கும், காணாமற்போன ஆட்களினதும் அவர்களின் உறவினர்களினதும் உரிமைகளையும் அக்கறைகளையும் பாதுகாப்பதற்கும், மீள நிகழாதிருப்பதனை உறதிப்படுத்துமுகமாகவும் அவசியமான எல்லா வழிமுறைகளையும் எடுப்பதற்குக் காணமாற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமொன்றை தாபித்தல் அவசியமாகவுள்ளதென ஏற்றங்கீகரிக்கப்படுகின்றதாதலாலும்...' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

*(மிகுதி அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வதை

## 37

## போரின் கவிதை

அவன் ஒரு அநாதை
தாய் இல்லா மழைத் துளி,
தந்தை இல்லா நிழல்.
நான் அவனை வளர்த்தேன்
என் பிள்ளை என நினைத்து,
என் உயிராகத் தழுவி.
அவன் சிரிப்பு என் காலையின் ஒளி,
அவன் கண்ணீர் என் மாலையின் மழை.
அவன் கைகள் என் கைகளுக்குள்
நம்பிக்கையாக இருந்தன.

ஒரு நாள் போரின் காற்று
அவன்மீது வீசியது.
போராட்டம் அவனை அழைத்துச் சென்றது
எங்கோ இரத்தம் வழியும் பாதையில்.
அவன் கையில் புத்தகம் இருந்தது
இப்போது துப்பாக்கி.
அவன் கண்களில் எரியும் தீ
முன்னய சிரிப்பின் பொழுதுகளை
சாம்பராக்கியது.

மாலை நேரம்
காற்றில் தங்கிய புகை வாசம்,
எங்கோ தொலைவில் வெடிக்கும்
குண்டின் சத்தம்......

அவன் கையிலிருந்து
பறந்த கைக்குண்டு..

என் தம்பி ஒரு போராளி
நிலத்துக்காக, நெஞ்சுக்காக,
நம்பிக்கைக்காக!

அவன் சிரிப்பு தீயின் ஒளியாக இருந்தது.
ஆனால்...
அந்தத் தீப்பொறி அவர்களை எரித்தது.
இராணுவம் பாய்ந்தது அவனைத் தேடி.
அவன் தான் குண்டு வீசியவன்!
என்றார்கள்.
எனக்குத் தெரியும்
அவன் வீசியது
அடக்குமுறைக்கெதிரான
ஒரு குரல்.
அவனைப் பிடித்தார்கள்...
கயிற்றால் கட்டி,
மழைத் துளிகளால் நனைத்து,
மனிதர் அல்லாத விலங்குகளாய்
சித்திரவதை செய்தார்கள்.
அவனது குரல் சிதறி
வானம் இரங்கி அழுதது.
சப்பாத்துக் கால்கள் அழுத்தின
'சுதந்திரம் கேட்கிறாயா?'
முகம் வெடித்து இரத்தம் ஓடியது
அவன் அழவே இல்லை!

மௌனத்தின் கைதிகளாக நின்ற
உறவுகளின் முன்னால் வைத்து
அவனைச் சித்திரவதை செய்கிறார்கள்..
அவர்கள் பக்கம் பலத்த இழப்பு....
கோபம் குரூரமாக இருந்தது...

இப்போது அவன் இல்லை,
ஆனால் மண்ணின் கீழ்
உறங்கும் அவனது ரத்தம்
ஒவ்வொரு விடியலிலும்
எழுந்து நிற்கிறது
இரவில் காற்று கத்துகிறது
அது என் தம்பியின் அலறலா?
இரும்புக் கம்பியில் சங்கிலி குலுங்குது
அது அவன் உயிரின் நடுக்கமா?
அவனை அழைத்துச் சென்றார்கள்
பயங்கரவாதி என்று குற்றஞ்சாட்டி.

புத்தகங்களை எறிந்துவிட்டு
கைக்குண்டுகளைக் கையில் எடுத்தவன்
அடித்தார்கள், மிதித்தார்கள்,
விசாரிப்பதற்குப் பெயரிட்டார்கள்.
அவனின் இரத்தத் துளிகள் விழுந்தன
அக்காவின் நெஞ்சின் நடுவில்.
தம்பி! என்று கூச்சலிட்டேன்,
ஆனால் குரல் கண்ணீரில் மூழ்கியது.

அவன் சிரித்த அந்த முகம்,
இப்போது காயங்களின் வரைபடம்.
காலம் சென்றது
ஆனால் இரத்தத்தின் வாசனை
இன்னும் போகவில்லை.

என் கண்களில்
இரவுகள் தங்கிவிட்டன,
அவன் பெயர் சொல்லும்போது
மனம் துடிக்கிறது.
அவன் சத்தமாக எதிர்க்கிறான்
நிரபராதியாக .....
சப்பாத்துக் கால் பட்டைகள்
உச்சியில் கசிந்து விழுகின்றன,
அவன் தளராத விரல்
நசுக்கப்படுகிறது..
அவர்கள் உற்சாகமாக

அடிக்கிறார்கள்.
கொதிக்கும் குரல்கள்
ஏதேதோ கேட்கின்றன.....
எதற்கும் பதிலற்று இறுகி
அத்தனை அடிகளையும் வாங்கி
குந்தியிருக்கிறான்...

அவனை இழுத்துச் செல்கின்றார்கள்
இரும்புக் கம்பியில் கட்டி,
குருதியைப் பிழிந்து.
அவன் வலியால் துடிக்கிறான்,
அவன் உடலில் இரத்தம்
ஓடுகிறது நதி போல்.
சப்பாத்துக் கால்களின் அடிகள்
அவன் மார்பில்
முத்திரை போட்டுக் கொள்கின்றன,
அவன் கண்கள்
இன்னும் தீயாக ஜொலிக்கின்றன,
நான் அடங்கமாட்டேன்!
என்று சொல்லும் தீச்சொல் போல.
அவன் நெஞ்சின் ஒவ்வொரு துடிப்பும்
என் நெஞ்சின் வலியாக மாறுகிறது.
அவன் விழும் ஒவ்வொரு துளியும்
என் கண்களில் கண்ணீராக பிறக்கிறது.

அவனை இழுத்துச் செல்கின்றார்கள்
இரத்தம் வழிய, அவன் உயிர் நழுவ,
அந்தக் காட்சி இன்னும்
என் கண்களில் உறைந்து கிடக்கிறது.

அவன் பெயரைச் சொல்லும்
ஒவ்வொரு முறையும்,
என் இதயம் வலிக்கிறது
அன்றிலிருந்து காலம் நின்றது போல.

மண்வாசனையில்
அவன் தடங்கள் இருந்தன,
அவனைக் காணமுடியவில்லை.
நாம் தேடிக் களைத்தோம்
அவனின் சிரிப்பைத் தேடினேன்,
ஒவ்வொரு இரவிலும்

அவனின் குரலைக் கேட்க முயன்றேன்.
ஆனால் காற்றோ பதிலளிக்கவில்லை.

ஒரு நாள்
அவனைப் பார்த்தேன்.
ஆனால் அவன் முகம்
ஒரு முகமூடியின் பின்னால் மறைந்திருந்தது.
அவன் காட்டிக்கொடுக்கும்
'தலையாட்டி'களில் ஒருவனாக நின்றான்.

நம்பமுடியாத தருணம்
இராணுவத்தை வெறுத்த அவன்,
இப்போது அவர்களுக்குச்
சேவை செய்கிறான்.
அவன் நெஞ்சில் நிகழ்ந்த கொடுமைகள்
அவனது ஆன்மாவையே
கல்லாக்கியிருக்குமோ?
"கடவுளே! நான் கத்தினேன்
கணவர் என் வாயைப்பொத்துகிறார்...
மௌனமாக வரும்படி...
இந்த இளம் பிள்ளை
தன் உயிரை மறந்திருக்கிறான்,
தன் குரலை நிழலாக்கி விட்டான்.

அந்த நாளுக்குப் பிறகு
அவனை மீண்டும் காணவில்லை.

இப்போது பல வருடங்கள் கடந்து விட்டன,
ஆனால் அவன் நிழல்
இன்னும் என் நெஞ்சில் உலாவுகிறது
அக்கா தண்ணி தா என்று
அவலக் குரல் எழுப்புவதாக
மனம் சிந்திக்கிறது....

அவன் எங்கே இருக்கிறான்?
மண்ணில் தானா? காற்றில் தானா?
யாருக்கும் தெரியாது
ஆனால் எனக்குத் தெரியும்
அவன் இன்னும்
எனக்குள் உயிரோடு இருக்கிறான்.

உடலை அடிக்கலாம்,
இரத்தம் சிந்தலாம்,
கயிற்றால் கட்டலாம்,
ஆனால்
எண்ணத்தை அடைக்கமுடியுமா?

வலியால் வளைந்த காயங்கள்,
ஒரு நாள் ஆறிவிடும்;
ஆனால் சிந்தனை,
அது இருளில் ஒளி தேடும் பறவை
அதைப் பிடிக்கமுடியாது.

சித்திரவதை ஒரு நொடிக்கான ஆட்சி,
ஆனால் சிந்தனை ஆயுளுக்கான
சுதந்திரம்.
அதை யாராலும் கைவசப்படுத்த
முடியாது.

எத்தனை கொடுமையானது இது?
ஒரு மனிதன் மற்றொருவரின்
ஆன்மாவை மிரட்டி பணிய வைப்பது
மனிதத்துவத்தின் மரணம் தான்!

நேற்று வரை மண் குளத்தில்
துள்ளியவன்,
மழைத்துளியில் சிரித்தவன்,
வீட்டின் வாசலில் பூ மிதித்தவன்.
இன்று கையில் துப்பாக்கி,
கண்களில் தீ, மனதில் எரியும் நியாயம்!

போராட்டம் அவனை இழுத்துச்
சென்றது,
அவன் கனவுகள் மாறின பாதை
மாறியது

இராணுவம் பிடித்தது
அவனை மையல் காற்றில் தூக்கிச்
சென்றது,
அவன் உயிர்துடித்தது வலியில்,
இரத்தம் சிந்திப் பாதை சிவந்தது.

அவனின் குரல் நிசப்தத்தில்
நொருங்கியது,
நான் மனிதன் தான்! என்ற சொல்லை
காற்று மட்டும் கேட்டுப்போனது.

இன்று எல்லாம் மாறி
இடம் நகர்த்தப்பட்டது...
அவன் சிரிப்பு இப்போது
நினைவின் சாம்பர்,
அவன் பெயர் இன்னும்
என் நெஞ்சின் நெருப்பு.
கடவுளே
ஒரு மண் குழந்தை இத்தனை
துயரத்தில்
மனிதத்துவத்தை
இழக்க வேண்டியதா?

போரின் கவிதை ஒன்று
அமைதியை விழுங்கி
அணைந்து போனதா?
என் தம்பி நீ இல்லையா?

அல்லது முகமூடிக்குப்பின்
காலத்திற்கும்
ஒளிந்து கொண்டாயா?
அவனால் வெளியே
ஏன் வரமுடியவில்லை?

ஆனந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்ஸ் அப் வாத்தியம்





# பேஸ்புக் பேத்தியும்

**தாத்தா:** இப்ப என்ன நேரம்? விடியக் காலமை வெளிக்கிட்டனி இப்பதானோ வீட்டை வாறாய்?

**பேத்தி:** வந்ததும் வராததுமா ஏன் கத்திறியள்? இண்டைக்கு எனக்குப் பின்னேர வகுப்பு. முடிய மூண்டு மணியாச்சு. நடந்துபோய் பஸ்பிடிச்சு வர நேரம் போட்டுது. உதுதான் வயசுபோனவையளை வீட்டிலை வைச்சிருக்கப்பிடாது எண்டு சொல்லுறது. எதுக்கெடுத்தாலும் சந்தேகம். நீங்கள் ஒண்டை விளங்கிக்கொள்ளுங்கோ. உங்கடை காலம் மாதிரி இல்லை. இப்ப எல்லாம் மாறிப் போச்சுது. அந்தக்காலத்தைப்போலை ஒளிச்சு மறைச்சுச் செய்ய வேண்டிய தேவை எங்களுக்கு இல்லை. சரி..சரி அம்மா எங்கை?

**தாத்தா:** கொம்மா உங்காலை எங்கையோ போட்டா. இப்ப ஆருக்கேன் சொல்லிப் போட்டுப் போற பழக்கம் இருக்கே? இப்ப பார். ஏன் நேரம் செண்டு வாறாய் எண்டு கேட்டதுக்கே நீ கத்துறாய். உங்களிலை இருக்கிற அக்கறையாலைதான் கேக்கிறமே ஒழிய உங்களை நோண்டிப் பாக்கிறதுக்கு இல்லை. விளங்குதே?

**பேத்தி:** சரி சரி.. கூல் டவுன் தாத்தா. நான் தெரியாமல் கத்திப்போட்டன். மன்னிச்சுக் கொள்ளுங்கோ.

**தாத்தா:** வந்ததும் வராததுமா நான் தான் உன்னைக் குழப்பிப்போட்டன். முகத்தைக் கழுவிச் சாப்பிட்டிட்டு வா. கதைக்க ரண்டு மூண்டு விசயம் இருக்கு. கொம்மா வந்தால் படி..படி எண்டு கத்துவா. உன்னை மினக்கெடுத்திறன் எண்டு எனக்கும் பேச்சு விழும்.

**பேத்தி:** சரி வந்திட்டன் சொல்லுங்கோ.

**தாத்தா:** இண்டையான் ஸ்பெஷல் டாக்குத்தற்றை பார்லிமெண்ட் பேச்சுத்தான். அவர் இப்ப எல்லாரையும் கள்ளன் எண்டுறார். சிங்களம் தெரியாட்டித் தமிழிலை கதை செம்மறி எண்டுறார். வட மாகாணத்தை எல்லாக் கள்ளரும் சேர்ந்து ஏமாத்தினம் எண்டு பார்லிமெண்டில சொல்லிப் போட்டார். அவர் அமைச்சரையும் விட்டு வைக்கேல்லை. வைச்சுத் தாழிக்கிறார். டாக்குத்தருக்குக் கதைக்கப் பேசத் தெரியாதே ஒழிய அவர் சொல்லுறதிலையும் சில நியாயமிருக்கு எண்டதுபோலை சனத்தின்ரை அபிப்பிராயம்.

**பேத்தி:** மேற்கொண்டு அவரைப் பற்றி வட்ஸ் அப்பில என்ன வாசிச்சனியள்? சொல்லுங்கோ. பிறகு நான் கதைக்கிறன்.

**தாத்தா:** வடக்கில் கள்ளர்களுக்குத் துணைபோகும் அமைச்சர். நாடாளுமன்றத்தில் டாக்குத்தர் காட்டம் எண்டு அவரைப் பற்றிச் செய்தியும் போட்டிருக்கு. அதை டீ.எஸ். ஒப்பிஸ்காரரும் கதைச்சவை. அதை நான் நம்பேல்லை. என்ரை வாசிப்பு அனுபவத்தைக்கொண்டு சொல்லுறன். அமைச்சரின்ர ஆட்டம் வடக்கிலை கொஞ்சம் கூடினமாதிரித்தான் தெரியுது. வேள்விக்குக் கொண்டு போற ஆடு மாதிரிக் கழுத்து நிறைய மாலையோடை வட்ஸ் அப்பிலை படங்கள். அது அநுரவின்ரை கொள்கைக்கு மாறெல்லே? சில இடத்திலை எல்லாத்துக்கையும் தலை ஓட்டுறார். வடக்கின்ரை ஏக போகப் பிரதிநிதி தான்தான் எண்ட நினைப்பு. அவர் தன்ரை தலைக்குள்ளை ஆரையோ றோல்மொடலா வைச்சிருக்கிறார் எண்டு நினைக்கிறன். நடிப்பிலை சிவாஜியை மிஞ்சிற மாதிரியும் அரசியலிலை எம்.ஜி.ஆரை மிஞ்சிற மாதிரியும் தெரியிது. அவர் யாழ்ப்பாணம் வந்து பல வருஷங்களா நிண்டு என்னத்தைப் படிச்சாலும் எங்கடை சனத்தின்ரை குணத்தை அவர் இன்னும் சரியா நாடி பிடிச்சுப் பாக்கேல்லை. இந்தியன் ஆமி அமைதிப்படையா வரேக்கை மாலை போட்டு வரவேற்றதும் எங்கடை சனந்தான். கொஞ்சக் காலத்திலை அடிச்சுக் கலைச்சதும் அவைதான். இப்ப இருக்கிற இளம் எம்.பி.த் தம்பிகளுக்கு அது தெரிய வாய்ப்பில்லை. ஏனெண்டால் அவைஅப்ப பிறந்திருக்கவும் மாட்டினம். என்னைப் பொறுத்தவரை அமைச்சருக்கு வடக்கிலை யோகம் குறைவுபோலை கிடக்கு. சனம் அவரை நிராகரிக்கத் துவங்கினால் திசைகாட்டி அரசு தங்களைக் காப்பாத்துறக்காக உவரை மாத்தவும் கூடும்.

**பேத்தி:** அவற்றை பேஸ்புக்கைப் பாக்கவேணும். அதை 'ரக்' பண்ணியும் பூஸ்ற் பண்ணியும் விடுகிறார். நீங்கள் சொன்ன மாதிரி ஆலாத்தி மாலை போட்டுச் சனம் தன்னைக் கொண்டாடுற மாதிரியான படத்தைப் போட்டு நான் அங்கை போன்னான். இங்கை போனான். அதைச் செய்தன். இதைச் செய்தன். அதிலை கலந்து கொண்டன். இதிலை கலந்துகொண்டன் எண்டு ஒரே சுயபுராணம் பாடுகிறமாதிரிப் பதிவுகள். என்ரை துறை அரசியல் விஞ்ஞானம் எண்ட படியாலை என்னோடை படிக்கிறவையள் பெரும்பாலும் அரசியலை நல்லா அவதானிக்கிறவையள்.

அவையளும் இதைத்தான் சொல்லினம். கன காலம் 'டக்கரை 'ஆண்டு அனுபவிச்ச சனம் ஒரு நாளிலை தூக்கி எறியேல்லையே. அது அமைச்சருக்கு விளங்கேல்லை. அவரோடை நிக்கிற மற்றவையள் டம்மியள் எண்டபடியாலைதான் அவர் இப்பிடி நடக்கிறார் போலை. அவையும் இவருக்குப் பயந்து சரிபிழை சொல்லுறேல்லை எண்டும் கம்பஸில கதைக்கினம். மீன் மலிவாக் கிடைக்கிற தெண்டத்துக்காக அடிக்கடி சுழ்பார்ட்டி வைக்கலாமோ? அரசியல் வாதியள் என்ன பவறோடை இருந்தாலும் அரகலயவை ஞாபகத்திலை வைச்சிருக்கிறது நல்லது.

**தாத்தா:** அதென்ன? எனக்கு விளங்கேல்லை பேஸ்புக்கை 'ரக்' பண்ணுறது பூஸ்ற் பண்ணுறது? அப்பிடியெண்டால் என்னடியம்மா?

**பேத்தி:** அதென்னண்டால் பேஸ்புக்கிலை நீங்கள் கனபேரைப் பாக்க வைக்கிறதுக்காக அதை மற்றவையின்ரை கணக்குக்கு வலிஞ்சு சேர்த்து அனுப்பலாம். பூஸ்ற் பண்ணுறது எண்டால் காசுகட்டி அதை விளம்பரம் எண்டு தெரியாமல் விளம்பரப்படுத்திறது.

**தாத்தா:** [illegible] சத்தம் கேக்கிது [illegible] தெரியேல்லை. மிச்சத்தை பிறகு கதைப்பம்.

# ஊர்ப்புதினம்

பாகம் 3

O இராகவன்

**1990** பிற்பகுதியில் வீட்டில நானும் அம்மாவும் மட்டுந்தான். (அது ஒரு பெரிய கதை. சந்தர்ப்பம் கிடைச்சால் அதையும் ஊர்ப்புதினத்தில சொல்லுறன்) அதால நாங்களும் இரவில வீட்டில கிடக்கி றேல்ல. அம்மா நவண்ணா வீட்டை போய் நிக்கிறவா. நான் சிவன் வீட்டை போய் நிப்பன். அங்க போனால் சிவன் இருப்பன். முருகன் கண்ணனாக்கள் வருவாங்கள். ஒரே பம்பலாயிருக்கும். பள்ளிக்கூடமுமில்லை. ரியூசனுமில்லை. ஒரே விளையாட்டுத்தான். அப்பிடியொரு பொற்காலம் வருமெண்டு நான் கனவிலயும் நினைக்கேல்ல. அண்டைக்கிரவு நான் சிவன் வீட்டை போனான். அவங்கட வீட்டை முன்னுக்கு கல்தூண்கள் வைச்சு பெரியதொரு விசாலமான ஒத்தாப்பு இறங்கியிருந்தது. நிலமும் சிமெந்தால போட்டிருந்தது. அதுக்கைதான் சிவன்ரை தாய் சரசன்ரி ஒரு கதிரையிலயிருந்து சுருட்டுப் பத்திக் கொண்டிருப்பா. அவன்ரை அம்மம்மாக்காரி ஒரு சின்ன உரலை வைச்சு நிலத்தில கால் நீட்டியிருந்து பாக்கு இடிச்சுக்கொண்டிருப்பா. அவவை நானும் 'அம்மம்மா! 'எண்டுதான் கூப்பிடுவன்.

சிவன் அவா என்ன வேலை சொன்னாலும் செய்யாமல் தட்டிக் கழிச்சுப் போட்டுப் போகிடுவான். நான் அவா என்ன வேலை சொன்னாலும் தட்டிக் கழிக்காமல் பக்குவமாய்ச் செய்துகுடுப்பன். அதால அம்மம்மாவுக்குச் சிவனைவிட என்னில நல்ல வாரப்பாடு. அநேகமாய் அவாவுக்குப் பாக்கிடிச்சுக் குடுக்கிறது நான்தான். அவாவும் மனிசன்காரனும் வாத்திமாராய் இருந்து பெஞ்சன் எடுத்தவை. அவர் செத்திட்டார். கந்தப்பு வாத்தியார் எண்டா ஊராக்களுக்குத்தெரியும். அம்மம்மாவுக்குப் பெயர் பத்தினி. என்ர அம்மா அவவைப் பத்தினியக்கா எண்டு சொல்லுவா. நல்ல சிவலை மனிசி. கொஞ்சம் உடம்பு. சட்டைபோட்டுச் சீலையைக் குறுக்குக் கட்டாகக் கட்டியிருப்பா. அப்பவே கொட்டன் பிடிச்சுத்தான் நடக்கிறவ. ஒரு எழுவது எழுவத்தைஞ்சு வயதுவரும். தனக்கு ரீச்சர் வேலை கிடைச்சு முதன் முதலாகப் பள்ளிக்கூடம் போனதிலயிருந்து பல கதையளை அவா எனக்குச் சொல்லியிருக்கிறா. அதுகளையெல்லாம் கேக்கப் புதுமையாயிருக்கும். அவாவிட்டக் கதை கேக்கிற ஒரே ஆளும் நான்தான். சிவன் அம்மம்மாக்காரியை ஒரு பொருட்டாயே மதிக்கிறேல்ல. பிறகெங்கை அவாவிட்டக் கதை கேக்கிறது? ஆனால் எனக்கு அவா சொல்லுற ஒவ்வொரு கதையையும் கேட்க வலு ஆர்வமாயிருக்கும்.

54

மற்றது இன்னொரு விசயத்தையும் இந்த இடத்தில நான் முக்கியமாகச் சொல்லியாகவேணும். அம்மம்மாவுக்கு பாக்கிடிச்சுக் குடுக்கேக்குள்ளை நானும் கொஞ்சம் வாயில போட்டுப்பாப்பன். அப்பிடியே போட்டுப் போட்டு அது எனக்கொரு பழக்கமாவே வந்திட்டுது. ஆக நான் வெத்திலை பாக்குப் போடப் பழகினதும் அங்கைதான். இண்டை வரைக்கும் அதை விடமுடியாமலிருக்கு. அம்மம்மா காசை ரூபா எண்டு சொல்லுறேல்ல. பவுண் எண்டுதான் சொல்லுவ. பத்து ரூபாவை ஒரு பவுண் எண்டு சொல்லுவா.

அதிலையொரு பெரிய வரலாறே அடங்கியிருக்கு. அவவின்ரை இளம்வயதில ஒரு பவுண் பத்து ரூபா வித்ததாம். அதால பத்து ரூபாவை ஒரு பவுண் எண்டு சொல்லுறது ஒரு மரபாயிருந்தது. இதைப்போல காசைப் பவுண் எண்டு சொல்லுற இன்னுமொராள் நவண்ணான்ரை தாய்க்காறி பத்திப்பெரியம்மா. அவ என்னிட்டப் பத்து ரூபாக் காசைத் தந்து. "இந்த ஒரு பவுணைக் கொண்டுபோய்ப் பொலிஸ் ஆறுமுகம் கடையில நாலு ஊர்க்கோழி முட்டை வாங்கிக்கொண்டோடியாடி என்ர செல்லம்!" எண்டு சொன்னது இப்பவும் எனக்கு நல்ல ஞாபகமிருக்கு. மற்றது அம்மம்மா கதைக்கிறதிலயும் கொஞ்சம் வித்தியாசமிருக்கு. அதைப் பற்றி வாற கிழமை சொல்லுறன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதிப்பாசிரியர் குறிப்புகளால் பொலிவுறும் நாடக ஆக்கங்கள்: 3

## குழந்தை ம.சண்முகலிங்கத்தின் ஐந்து நாடக நூல்கள்

கதிரேசு ரதிதரன்

1980 களில் எழுதப்பட்ட (1982 என்று இருந்த ஆண்டை நாடக ஆற்றுகை செய்யப்பட்டதைக் கொண்டு சரியான ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது) "உறவுகள்" நாடகத்திற்காக 55 குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி கருதி சிலவற்றை நோக்கலாம். இந்த நாடகத்திற்கான மூலப்பிரதி கிடைக்கவில்லை. தட்டச்சு செய்த பிரதியே கிடைத்தது. தட்டச்சுப் பிரதியின்படி எழுதியது 1982 என்று கருதப்படுகிறது. ஆனால் பல்வேறு தகவல்களின் அடிப்படையில் அது 1980 என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது. அண்மைக்காலப் புத்தக வெளியீடுகளில் எழுத்துப்பிழைகள், தவறுகள் காணப்படுவது விடயங்களைப் பொறுப்பாகச் செய்யாதுவிடுதல் போன்றன பொதுவாகப் பல இடங்களில் காணப்படுகிற பொறுப்பின்மையைக் காட்டுகிறது. இந்த நாடகத்தின் எழுத்துருவில் பல விடயங்கள் சரிசெய்யப்பட்டன.

இப்புத்தகத்தில் பதிப்பாசிரியர் இந்த நாடகம் எழுதிய பின்னர் எங்கெங்கு ஆற்றுகை செய்யப்பட்டது, எத்தனை ஆற்றுகைகள்? யாரால் செய்யப்பட்டன மற்றும் நாடகப் படங்கள் என்பனவற்றைத் தேடிச்சேர்த்து இந்நாடக நூலை வெளியிட்டுள்ளார்.

இந்த எழுத்துருவில் சொற்கள் எவ்வாறு மாற்றப்பட்டன, விளக்கப்பட்டன என்பதான குறிப்புகள் காணப்படுகின்றன. உதாரணமாகப் பாத்திர உரையாடலில் வரும் 'பலாலி' என்ற ஊரின் பெயர் பலாலி ஆசிரியர் கலாசாலையைக் குறிக்கிறது. 'ஒட்டகப்புலம்' என்ற சொல்லுக்கு அடுத்த சந்ததிக்கு இந்தச் சொல்லின் அர்த்தம் தெரியாமல் போக வாய்ப்புள்ளதால் கட்டாயம் இந்தக் குறிப்புப் போடப்படுதல் முக்கியமாகும். தமிழில் எழுதப்பட்ட ஆங்கிலச் சொற்களின் அர்த்தப்பிழை வராது அதற்கான ஆங்கிலச் சொற்களும் குறிப்புக்களில் உண்டு. அதேபோல இந்நாடகத்தில் நடிகர்களின் பேச்சு இதத்திற்காகச் சில சொற்கள் நாடகாசிரியரின் நெறியாள்கையில் ஆற்றுகையின்போது மாற்றம் செய்யப்பட்டன. (உதாரணம்: சுருட்டுப் புகைக்க என்பது சுருட்டு பத்த என மாற்றப்பட்டுள்ளது). அம்மாற்றங்கள் பற்றிய குறிப்புகளும் உண்டு. குழுக்குறி பற்றிய விளக்கம், பிழையாக இருந்த இலக்கங்கள் மாற்றிய குறிப்புகளுடன் தர்க்கரீதியான தெளிவுபடுத்தும் (6 மாதம் என்பது 8 மாதமாக்கப்பட்டது, 2 இலட்சம் என்பது 3 இலட்சம் ஆக்கப்பட்டது) அடிக்குறிப்புகளாக இருக்கின்றன.

அடுத்து, குறிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஏனென்றால் தட்டச்சுச் செய்தவர் குறிகள் போடாது விட்டுள்ளார். உண்மையில் சண்முகலிங்கத்தின் நாடகங்களின் உரையாடலின் உணர்ச்சி மாற்றங்கள் இந்தக் குறிகளின் தன்மை மற்றும் எண்ணிக்கையை வைத்தே நோக்க முடியும். உதாரணமாக பல விளிப்புக்குறிகள் வருவது, விளிப்புகுறியும், கேள்விக்குறியும் சேர்ந்து வருவது போன்றவற்றைக் குறிப்பிடலாம். உரையாடல் ஓட்டத்தில் உள்ள பிழைகள் திருத்தப்பட்டதற்கான அல்லது இணைக்கப்பட்டதற்கான குறிப்புகளோடு, புதிதாகப் பதிப்பாசிரியரால் எழுதப்பட்ட பாத்திர விவரங்கள் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. அடுத்த நாடகமான, 'சத்திய சோதனை' (1984) என்கின்ற சுயவாக்க நாடக நூலில் 116 குறிப்புகள் இடப்பட்டுள்ளன. ஒரு பக்கத்தில் உள்ள மேடைக் குறிப்பில் மட்டும் 34 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. விரிவஞ்சி எல்லா குறிப்புகளையும் தராது சில உதாரணங்கள் மட்டும் இங்கு தரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் நூலினைநோக்கிக் கண்டுகொள்க. இந்த நாடகத்திற்கான மூல எழுத்துரு கிடைக்கப்பெறவில்லை. இரண்டு தட்டச்சு எழுத்துருக்கள் ஒப்பிட்டு நோக்கி சரிபார்க்கப்பட்டன. மிக அதிகளவான குறிப்புகள் காணப்படுவது நேர்த்தியையும் செம்மைப்படுத்தலையும் கொண்டுவரும் ஒரு குறிகாட்டியாகச் சொல்ல முடியும்.

பதிப்பாளர் நவராஜ் எல்லா எழுத்துருக்களையும் பல தடவை வாசித்துச் சரிபார்க்கும் பண்பானது எழுத்துருக்களைப் பகுப்பாய்வு நோக்கில் பார்க்கும் திறனை வளர்த்திருக்கிறது. உதாரணமாக இந்த 'சத்திய சோதனை' நாடக எழுத்துரு எத்தனையாம் ஆண்டு எழுதப்பட்டது என்பது எங்கும் குறிப்பிடப்படவில்லை. எனினும் நாடகத்தில் வரும் ஒரு உரையாடலான "வெள்ளையன் போய் 36 வருசங்கள்" எனும் பாத்திரத்தின் கூற்றை வைத்து 1984 ஆண்டு எழுதப்பட்ட எழுத்துரு என்பது ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். அதேபோல நாடகத்தில் பயன்படுத்தப்பட்ட பாடல்களின் மூலத்தைத்தேடிக் கண்டறிந்து பார்த்துப் பாடலிலுள்ள தவறுகள் திருத்தப்பட்டுள்ளதுடன் அவை எங்கு இடம்பெற்றுள்ளன என்ற விபரங்களும் தரப்பட்டுள்ளன. இவற்றோடு பாத்திரப் பட்டியல்படுத்தல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எழுத்துருவில் உள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழ்ப்படுத்தியதோடு ஆங்கில சொற்கள் அடிக்குறிப்புப் பகுதியில் வைத்து விளக்கப்பட்டுள் ளன. ஒரே நாடகத்திற்கான இரண்டு தட்டச்சு எழுத்துருக்களின் சொற்களில் காணப்படும் வேறுபாடுகளைச் சரிசெய்த விபரம், வசனங்களை இடமாற்றிய விபரம் மற்றும் எழுத்துருவில் விடுபட்டுப்போன சில சொற்களைத் தர்க்கரீதியாகச் சிந்தித்தும், ஊக ரீதியாக யோசித்தும் செய்யப்பட்ட பல்வேறுபட்ட மாற்றங்கள் அடிக்குறிப்புகளில் விளக்கப்பட்டுள்ளன.

அடுத்ததாக, அவரது 'தான் விரும்பாத் தியாகி' என்ற ஆறு மொழிபெயர்ப்பு நாடகங்களை உள்ளடக்கிய தொகுப்பில் பதிப்பாளரின் அடிக்குறிப்புகள் பற்றி நோக்க முடியும். சண்முகலிங்கம் இதுவரை 60 நாடகங்கள் வரை மொழிபெயர்த்துள்ளார். இவரது மொழிபெயர்ப்பு நாடகங்கள் எல்லாம் 'நேரடி மொழிபெயர்ப்பாக' இருப்பதற்கான சண்முகலிங்கத்தின் பிரதான நியாயம் யாதெனில் தான் எப்போதும் மூல எழுத்துருவுக்கும் அதன் ஆசிரியருக்கும் உண்மையாகவும், நேர்மையாகவும் இருத்தல் என்பதாக அமைகிறது. இவரது மொழிபெயர்ப்புகளில் ஒரு முக்கியமான விடயம், ஒரு நாடகத்துக்கான பல ஆங்கிலப் பிரதிகள் காணப்பட்டால் அவை எல்லாவற்றையும் ஒப்புநோக்கியே தமிழ் மொழிபெயர்ப்பைச் செய்வார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே வாசகர் ஒருவர் அவரது மொழிபெயர்ப்பை ஒரு ஆங்கிலப் பிரதியுடன் ஒப்பிட்டுப்பார்க்க முடியாது. இந்த அடிக்குறிப்புகளை வைத்தே பல ஆய்வுகளைச் செய்யலாம். உதாரணமாக மொழிபெயர்ப்பில் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் பற்றியும், பல மூலப்பிரதிகளை ஒப்பிட்டு எழுதியதைப் பற்றியும் ஆராயலாம்.




அந்த வகையில் 'அந்திமாலைப் பாடலொன்று.' (Swan song) - 2005 இல் மொழிபெயர்க்கப்பட்ட இந்த நாடகத்துக்காக 36 குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த மொழிபெயர்ப்பில் சொல் மாற்றம், பெயர் மாற்றம், மொழிபெயர்ப்பாளரால் செய்யப்பட்ட மாற்றங்கள், சொல்லின் மொழிபெயர்ப்பு தமிழ் விளக்கத்தை தெளிவுபடுத்த ஆங்கிலச் சொல்லையும் அல்லது ஆங்கில வசனத்தை அருகில் வைத்தமை, மாறி மொழிபெயர்க்கப்பட்ட சொல்லுக்குச் சரியான சொல்லைக் கண்டுபிடித்து இட்டமை, ஒத்திகையின் போது செய்யப்பட்ட சொல் மாற்றங்கள் சேர்ப்புகள் குறித்துக் காட்டப்பட்டமை, மொழிபெயர்ப்பில் காணப்படும் அக்காலக் கவிதைகள் பற்றி தகவல்கள் மற்றும் பின்புலங்களைத் தேடிக்கண்டு பிடித்து எழுதியமை எனப் பல பயன் தரும் குறிப்புகளைப் பதிப்பாசிரியர் பதிவு செய்துள்ளார்.

ரவீந்திரநாத் தாகூரினால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 'துறவி' (Sanyasi or The Ascetic) எனும் மொழிபெயர்ப்பு நாடகத்தில் 57 குறிப்புகள் காணப்படுகின்றன. இந்தக் குறிப்புகளில் நாடகம் எழுதப்பட்ட காலத்து வரலாறு சார்ந்த விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு குறிப்புகளாக எழுதப்பட்டுள்ளன என்பது இங்கு முக்கியமான அம்சமாகும். 'தான் விரும்பாத் தியாகி' (Unwilling Martyr) - (2005) என்ற நாடகத்துக்கு 20 அடிக்குறிப்புகள் காணப்படுகின்றன. இது அன்ரன் செக்கோவின் நாடகம் என்பதால் ரஷ்ய நாட்டுச் சொற்புழக்கம் மற்றும் அந்தக்கால மனிதர்களின் அனுபவங்கள் என்பன நாடக எழுத்துருவின் பாத்திர உரையாடல்களில் காணப்படுகின்றன. அவற்றைப் பதிப்பாசிரியர் தேடிக் கண்டுபிடித்துத் தருவது அந்த நாடகத்தின் வாசிப்பில் ஆர்வத்தைத் தூண்டுவதோடு அதை நெறியாள்கை செய்வதற்கும் வசதியாக இருக்கிறது. நாடகப் பாத்திரங்களின் பின்னணியில் காணப்படும் பெயர்களின் அர்த்தம், பொருள், பண்பாடு மற்றும் பின்னோக்கிய வரலாறு போன்ற பல தகவல்கள் உண்டு. உதாரணமாக டோல்கச்சோவ் என்ற பெயருக்கு விடாக்கண்டன் எனும் அர்த்தம் உள்ளமை, கேக்குலிஸ் மல்லன் என்பது கிரேக்க ஐதீக பாத்திரம் மற்றும் நாடகத்தில் வரும் மேயோவோஸ் என்ற பெயர், நாடகம் எழுதப்பட்ட காலத்தில் வாழ்ந்த ஒரு உள மருத்துவர் என்பதை பதிப்பாசிரியர் கண்டுபிடித்து குறிப்புகளில் விளக்குகிறார். இந்தக் குறிப்புகள் நெறியாள்கையை இலகுபடுத்தவும், சரியான திசையில் போகவும் வழிவகுக்கும். இந்த நாடகம் ஏற்கனவே நெறியாள்கை செய்யப்பட்டுவிட்டது. இவரது அடிக்குறிப்புகளின் பின்னர் அந்த நாடகம் மீள்வாசிப்பிற்கும், நெறியாள்கைக்கும் உட்படவேண்டிய தேவை வந்துள்ளது. மற்றும்படி சொல், பெயர், வசன மாற்றங்கள், திருத்தங்கள், சேர்ப்புகள் என்பனவும் குறிப்பில் காணப்படுகின்றன.

"இரவலன் அல்லது இறந்துபோன நாய்" (2017) என்ற தமிழ் மொழிபெயர்ப்பு நாடகத்துக்கான மூலப்பிரதி பேர்ட்டோல்ட் பிரெச்ட்டினால் எழுதப்பட்டதாகும். இந்த நாடகத்திற்கு 21 அடிக்குறிப்புகள் இடப்பட்டுள்ளன. வழமையான அடிக்குறிப்புகளோடு, நாடகம் மொழிபெயர்க்கப்பட்ட கால அளவு, பொருத்தமான சொல் மாற்றல், விடுபட்ட மூலச் சொல் கண்டுபிடித்தல், கடினமான சொல்லிற்கு இலகுவான சொல்லைக் குறிப்பிடுதல் போன்ற பல்வேறு அடிக்குறிப்புக்கள் இதில் காணப்படுகின்றன.

சாமுவேல் பெக்கெற்றின் நாடகம் 'வார்த்தைகளற்ற நடிப்பு' (Act Without Words A Mime for one Player) சண்முகலிங்கத்தால் 2013 இல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. அதன் ஆங்கில மூலத்தை வைத்துச் செம்மைப்படுத்தும் பொறுப்பை குழந்தை சண்முகலிங்கம் முற்றுமுழுதாக நவராஜிடம் விட்டிருந்தார். அவருடன் உரையாடி தான் செய்த திருத்தங்களை நவராஜ் இந்த மொழிபெயர்ப்புக்குப் பின்னர் 113 அடிக்குறிப்புகளாக இட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதில் மொழிபெயர்ப்புக் காலம் ஆராய்ந்து கண்டறியப்பட்டமை, தமிழ்ச் சொல்லிற்கு ஆங்கிலச் சொல்லாடல், ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லாடல் போன்ற பல விளக்கங்கள் அடிக்குறிப்பில் காணப்படுகின்றன. அதேபோல தான் கோபால் முகர்ஜியின் The Judgment of Indira| நாடகமானது 'இந்திரன் தீர்ப்பு' என்ற பெயரில் தமிழில் 2005 ஆண்டு மொழிபெயர்க்கப்பட்டது. இந்த நாடகத்துக்கு 32 அடிக்குறிப்புகள் காணப்படுகின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
16 நவம்பர் 2025

## சிறுவர் கைவண்ணம்







ப.பளுஷயன்
தரம்- 9A
யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரி




அ.அஸ்விதா
தரம்- 7D
யா/ இந்து மகளிர்
கல்லூரி




அஜிஷா
தரம்- 6
யா/ சாவகச்சேரி
இந்துக் கல்லூரி



சி.பிரவின்
யா/சாவகச்சேரி இந்துக்
கல்லூரி.

# தீர்வுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று.இந்திய-இலங்கை உடன்படிக்கை.மற்றது.பிரபாகரன்=ரணில் உடன்படிக்கை.இரண்டு உடன்படிக்கைகளிலும் மூன்றாவது தரப்பின் பிரசன்னம் இருந்தது.இந்திய=இலங்கை உடன்படிக்கையின் பின்னணியில் இந்திய அமைதிகாக்கும் படை நாட்டுக்குள் இறக்கப்பட்டது.நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளில் ஸ்கண்டிநேவிய யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழு நாட்டுக்குள் நின்றது. இந்த இரண்டையும் தவிர மூன்றாவதாகக் கூறக்கூடியது ஐ.நா.வின் பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம். ஆனால் இதில் ஐநா.அழுத்தத்தைப் பிரயோகிக்கின்ற அல்லது கண்காணிக்கின்ற ஒரு தரப்பாகச் செயற்படவில்லை.அதனால் தான் நிலைமாறு கால நீதியானது சுமந்திரன் கூறுவதுபோல"தோற்றுப்போன பரிசோதனையாக" முடிந்தது.அதைத் தோற்கடித்தது தமிழர்கள் அல்ல,சிங்களத் தரப்புத்தான்.

எனவே இப்பொழுது ஒரு தெளிவான சித்திரம் கிடைக்கிறது.தமிழ் மக்கள் போராடியதால்தான்,பிராந்தியப் பேரரசாகிய இந்தியாவின் தலையீட்டினால்தான் 13 ஆவது திருத்தம்கூட சாத்தியமாகியது. தமிழ் மக்கள் போராடவில்லை என்றால் அதுவும் கிடைத்திருக்காது.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய சித்தார்த்தன் ஒரு விடயத்தைத் தெளிவாகச் சொன்னார். அநுர உட்பட எந்த ஒரு சிங்களத் தலைவரும் தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தர மாட்டார்கள் என்று.குறிப்பாக பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தீர்வை முன்வைத்த சந்திரிகா 2009க்குப்பின் இந்திய ஊடகம் ஒன்றினால் நேர் காணப்பட்டபோது,என்ன சொன்னார் என்பதனை அவர் சுட்டிக்காட்டினார். பேட்டி கண்டவர் கேட்கின்றார்,"இப்பொழுது உங்களுக்குச் சந்தர்ப்பம் தரப்பட்டால் நீங்கள் முன்னர் முன்வைத்த அந்த முன்மொழிவை நிறைவேற்றுவீர்களா?" என்று.அதற்குச் சந்திரிகா கூருகிறார் "Perhaps less""பெரும்பாலும் இல்லை"என்ற பொருள்பட. ஏனென்றால் இப்பொழுது விடுதலைப்புலிகள் இயக்கம் இல்லை என்பதால் என்றும் கூறியுள்ளார்.

மேலும் சித்தார்த்தன் ஒரு விடயத்தைச் சொன்னார். நிலைமாறு கால நீதியின் கீழ்,புதிய யாப்பு ஒன்றை உருவாக்குவதற்காக உழைத்தபோது, உருவாக்கப்பட்ட குழுக்களில் ஒன்றில் அவரும் அங்கம் வகித்தார்.அந்தக்காலகட்டத்தில் சம்பந்தர் அடிக்கடி தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வாக்குறுதிகளை வழங்குவார். "அடுத்த தீபாவளிக்குத் தீர்வு அடுத்த வருஷப்பிறப்புக்குத் தீர்வு" என்று சம்பந்தர் அடிக்கடி நம்பிக்கையூட்டும் வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கு வழங்கி வந்தார். ஒருமுறை சித்தார்த்தன் இதுதொடர்பாக சம்பந்தரிடம் கேட்டிருக்கிறார்.எதற்காக அப்படிக் கூறுகிறீர்கள்?இதில் நாங்களும் சம்பந்தப்பட்டிருப்பதனால் மக்கள் எங்களிடமும் கேட்கிறார்கள், என்று.அதற்கு சம்பந்தர் சொன்னாராம், "இந்த யாப்புருவாக்க முயற்சியில் தமிழ்த் தரப்பின் பிரதிநிதியாக நான் ஈடுபட்டு வருகிறேன். இந்த முயற்சி வெற்றி பெறாது என்று நானே சொன்னால், பிறகு எதற்கு அதில் நான் ஈடுபடுகிறேன் என்று மக்கள் கேட்பார்கள். எனவே நான் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வாக்குறுதிகளை வழங்க வேண்டியுள்ளது" .

இதைச் சொன்ன சித்தார்த்தன் மேலும் ஒரு விடயத்தைச் சொன்னார், அந்த முயற்சி வெற்றி பெறாது என்பது சம்பந்தருக்கும் தெரியும் என்று. அதாவது சம்பந்தர் தமிழ் மக்களுக்குத் தொடர்ச்சியாகப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வந்திருக்கிறார்.இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், சம்பந்தர் தனது மக்களுக்கு உண்மையைச் சொல்லவில்லை.

மூன்றாவது தரப்பின் அழுத்தம் இல்லாமல் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு ஒரு தீர்வை நோக்கி வளையாது என்பதனை புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிகள் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில்,2016இல்,மன்னாரில்,ஆயர் இல்லத்துக்கு அருகே நடந்த,"தடம் மாறும் தமிழ்த்தேசியம்?"என்ற கருத்தரங்கில், கட்டுரையாளர் சம்பந்தருக்குச் சுட்டிக்காட்டினார்.அப்பொழுது சம்பந்தர் இந்தக் கட்டுரையாளரை நோக்கி,தலையைச் சாய்த்து,மண்டைக்கண்ணால் பார்த்துக்கொண்டு அழுத்தம் திருத்தமான குரலில் சொன்னார் "சிங்களத் தலைவர்கள் ஒரு தீர்வைத் தர மாட்டார்கள் என்று கூறுவது வரண்ட வாதம்;வறட்டு வாதம்" என்று. ஆனால் எது வறண்ட வாதம் என்பதனை வரலாறு நிரூபித்தது.தந்தை செல்வா கலையரங்கின் கூரை பதிந்த அறைக்குள் சம்பந்தரின் உடல் தனித்துவிடப்பட்ட இரவில் , வரலாறு தான் ஒரு கண்டிப்பான கிழவி என்பதை நிரூபித்தது.

எனவே ஒரு நூற்றாண்டுக்கு மேலாகக் கற்றுக்கொண்ட பாடம் என்னவென்றால், சித்தார்த்தன் கூறுவதுபோல, இப்போதுள்ள அநுர உட்பட எந்த ஒரு சிங்களத் தலைவரும் தமிழ் மக்களுக்குத் தாமாக முன்வந்து தீர்வைத் தர மாட்டார்கள் என்பதுதான்.கஜேந்திரகுமார் அங்கே சுட்டிக்காட்டியதுபோல,சிங்கள பௌத்த ஒற்றையாட்சி அரசுக் கட்டமைப்புக்குள் இணைக்கப்பட்ட ஒரே ஒரு தீர்வு 13ஆ வது திருத்தம்தான்.அதுகூட தமிழ்மக்களின் இரத்தத்தால் வரையப்பட்டது; இந்தியப் பேரரசின் அழுத்தம் இருந்தது.

எனவே தமிழ் மக்கள் போராடவில்லை என்றால்,மூன்றாவது தரப்பு ஒன்றின் அழுத்தம் இல்லையென்றால் தமிழ் மக்களுக்கு இனியும் தீர்வு கிடைக்காது.

இந்த இடத்தில்,கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த நிகழ்வில் கூடிய கட்சிகள் உட்பட எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் இரண்டு முக்கியமான கேள்விகளுக்குப் பதில் கூற வேண்டும். முதலாவது கேள்வி, சமஷ்டியை அடைவதற்கு தமிழ்க் கட்சிகளின் வழி வரைபடம் என்ன? இந்தக் கேள்வியை சில ஆண்டுகளுக்கு முன் விக்னேஸ்வரன் அப்பாவித்தனமாக கேட்டிருந்தார். அவரிடம் அதற்குப் பதில் இல்லை என்பதனால் அப்படிக் கேட்டிருந்தார். இரண்டாவது கேள்வி.மூன்றாவது தரப்பு ஒன்றின் அழுத்தம் இல்லாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என்பதே ஒரு நூற்றாண்டு காலமாக கற்றுக்கொண்ட பாடம்.அப்படியென்றால் அந்த மூன்றாவது தரப்பை அணைத்து எடுப்பதற்கு தமிழ் மக்களிடம் உள்ள வழிவரைபடம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org